# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 1 | ஞாயிறு 19-3-39 வெகுதான்யஹு பங்குனிமீ 6உ | முத்து 25 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. விலகிய மேகங்கள் | ... | 690 |
| 2. எங்கும் அதேபேச்சு | ... | 692 |
| 3. போகிற போக்கில் | ... | 694 |
| 4. வார நடப்பு | ... | 696 |
| 5. சாமியா பூதமா? (ஸ்ரீ. டி. எஸ். ராமானுஜம், எம். ஏ., எல். எல். பி.) | ... | 697 |
| 6. மிருக சிகிச்சை (ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி) | ... | 699 |
| 7. ஜோஸ்யம் (ஸ்ரீ. ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.) | ... | 702 |
| 8. காதல் நிலை (ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்) | ... | 705 |
| 9. இல்லொளி (குகப்ரியை) | ... | 710 |
| 10. நமது இஷ்யூரன்ஸ் கம்பெனிகள் | ... | 713 |
| 11. கோள்வினைத் திறமை (டாக்டர் பி. எஸ். லோகநாதன், எம். ஏ., டி. எஸ்ஸி.) | ... | 715 |
| 12. வேலை நிறுத்தம் (சிரேஷ்டன்) | ... | 719 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# விலகிய மேகங்கள்

ஆகாயத்தில் மேகங்கள் திரண்டுவந்து சூரியனைச் சற்று மறைத்தன. அப்போது கொஞ்சம் மப்புப்போடவே சிலர் மேல் நோக்கிப் பாராமல் 'ஓஹோ! இன்றைக்கு கிரஹணம் போலிருக்கிறது. இனிமேல் கொஞ்ச நாழி இருட்டாகத்தான் இருக்கும்' என்று மூக்குக் கண்ணாடியை ஒரு தடவை கழட்டித் துடைத்துப் போட்டுக்கொண்டார்கள்.

இதே மாதிரியான நிலைமை சமீபத்தில் அரசியல் உலகில் ஏற்பட்டது. ஆம், ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் பலவிதமான அபசகுனக் குரல்கள் ஒலித்தன. "இன்னும் ஒரு வருஷத்துக்குக் காங்கிரஸ் குட்டிச்சுவராய்த்தான் போகப் போகிறது" என்று சில பிரகிருதிகள் சொன்னார்கள் "காங்கிரஸில் இனிமேல் பிளவுதான், தேசம் ரணகளம்தான்" என்றும் கூறப்பட்டது.

ஆனால், சூரியன் எப்போதுமே மேகத்திற்குள் அகப்பட்டுக்கொண்டு ஒரேஇடத்தில் இருக்கிறதில்லை யாகையாலும், நாம் எவ்வளவு இங்கிருந்து சத்தம் போட்டாலும் அதன் பாட்டுக்கு தன் காரியத்தைச் செய்கிறதாதலாலும், சிறிது நேரத்திற்கெல்லாம் 'பளீ' ரென்று வெயில் வீச ஆரம்பித்தது. அண்ணாந்து பார்த்தால் சூரியனைப் பார்க்க முடியவில்லை; அவ்வளவு ஜகஜ்ஜோதியாய் ஒளிவீசிற்று. ஜோஸ்யம் சொன்னவர்களெல்லாம் தலையைச் சொரிந்து கொண்டார்கள்.

இதே மாதிரி, திருபுரியில் காங்கிரஸ் கூடினது தான் தாமதம், 'பிளவு! பிளவு!' என்று கத்திக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் பிரமித்துப் போகும்படி ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. வலதுகை—இடதுகை சண்டைகள் எல்லாம் தீர்ந்து போய் காங்கிரஸில் வேற்றுமை மறைந்தது. பண்டித கோவிந்த வல்லப பந்த் தீர்மானம் பெருத்த மெஜாரடியால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியதிலிருந்து ஒற்றுமை ஊர்ஜிதமாயிற்று. போஸ் தேர்தலால் சர்வநாசம் உண்டாகுமென்று நினைத்தவர்கள் திடீரென்று பேசா மடந்தைகளாக ஆனார்கள்.

போஸ் தேர்தலால் உண்டான குழப்பத்தைப்பற்றி இப்போது நாம் ஆராய விரும்பவில்லை. ஆனால் ஒரே ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். ஒருவர் தலைமைப் பதவிக்கு நிற்பதைத் தடுக்க எந்த காங்கிரஸ்காரருக்கும் உரிமை கிடையாது. எல்லோரும் நிற்கலாம்; ஆனால் யார் ஒருவரை தேசம் தேர்ந்தெடுத்து விட்டதோ அவருக்கு விரோதமாக ஒருவரும் கிளர்ச்சி செய்யக்கூடாது. அப்படி செய்வது ஜனநாயகத்துக்கு விரோதம். 'ஜனநாயகம்' என்று சொல்லிக்கொண்டே அதற்கு விரோதம் செய்வது தேசத் துரோகம் என்று நாம் நினைத்தோம். ஆனால் சில தலைவர்கள் காந்திஜியையும் காந்தியத்தையும் தேர்தலுடன் பிணைத்தார்கள். போஸ் காந்தியத்தின் விரோதி என்று கூறினார்கள். அவர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரக்கூட ஒரு அங்கத்தினர் முயன்றார். நெருக்கடி உண்டாகுமோ என்று சிலர் சந்தேகித்தார்கள்.

இதனால்தான் நாம் ஸ்ரீ. சுபாஷுக்கு விட்டுக்கொடுத்தாகிலும் ஒற்றுமையைக் காப்பாற்றவேண்டும் என்று எழுதினோம். எந்தக் கட்சியில் குற்றமிருந்தபோதிலும் தேசத்திற்காக, யாராகிலும் ஒருவர் விட்டுக் கொடுக்கவேண்டும் என்று மன்றாடினோம்.

ஆனால் சங்கடங்கள் எல்லாம் திருபுரியில் நீக்கப்பட்டதுபற்றி சந்தோஷப்படுகிறோம். ஸ்ரீ. கோவிந்த வல்லப பந்த் தீர்மானத்தின்படி காங்கிரஸ் ஸ்ரீ. போஸுக்கு ஆதரவளித்ததன்றி மகாத்மா

காந்தியிடமும் நம்பிக்கையை ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஸ்ரீ போஸின்மேல் கொண்டுவரப்பட்ட 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' என்பது சுத்த அபத்தம் என்றும் ஸ்ரீ பந்த் கூறினர். இருகட்சியினருக்கும் ஏற்பட்ட பிளவை நீக்கி ஒற்றுமை உண்டாக்குவதுதான் தீர்மானத்தின் நோக்கம் என்று தெளிவு படுத்தினர். இதனல் நெருக்கடி தொலைந்தது; காரியக் கமிட்டி மெம்பர்கள் தங்களுக்குள் போட்டுக்கொண்ட சண்டை தேசத்தில் குழப்பமாய் முடியவில்லை.

மகாத்மாவின் தலைமையைப் பற்றியோ அவர் சக்தியைப் பற்றியோ சந்தேகிப்பவர்கள் தேசத்தில் ஒருவருமில்லை. அப்படி சந்தேகிப்பவர் மனோ ராஜ்யத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்க வேண்டும். ஆனல் காந்தீயம் என்பதை சில தலைவர்கள் இந்தப் பூசலில் ஓர் பிரச்னையாக நுழைத்து விட்டார்களாதலால் அதைப் பற்றி ஓர் தீர்மானம் கொண்டுவருவது அவசியமாயிற்று. அத் தீர்மானத்தால் காந்திஜி ஒரு குறிப்பிட்ட சாராரின் சொத்து அல்ல; தேசத்தின் சொத்து என்றும் தெளிவாயிற்று.

திருபுரி காங்கிரஸில் சுபாஷ் செய்த பிரசங்கம் ஒரே ஒரு விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் சர்வ சாதாரணமாயிருந்தது. அதாவது, பிரிட்டனுக்கு எச்சரிக்கை விடுவதைப் பற்றி சுபாஷ் தன் எண்ணத்தை வெளியிட்டிருந்தார். இத்தகைய எச்சரிக்கை உபயோகமில்லை. சமயத்தைப் பார்த்து சந்தர்ப்பங்களை அனுசரித்து நமது போர் முறையை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர இத்தகைய முரசை முதலிலேயே கொட்ட வேண்டாம்.

திருபுரி காங்கிரஸால் ஏற்பட்ட சில பலன்களை இப்போது நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(1) காங்கிரஸ் தலைவர் எப்பொழுதும் போல தேசத்தின் தலைவர். இந்த நெருக்கடியால் அவருடைய சக்தி அதிகப்பட்டதே தவிர குறையவில்லை.

(2) ஆனல் எப்பொழுதும் போல காந்திஜியை ஆலோசித்துக் கொண்டு காரியக்கமிட்டியை நியமனம் செய்ய வேண்டும். இதில் கூட ஒன்றும் விசேஷமில்லை. ஏனென்றல் வருஷா வருஷம் காந்திஜியின் ஆலோசனைப்படிதான் காரியக் கமிட்டி அமைக்கப்படுகிறது.

(3) சென்ற வருஷத்திய காங்கிரஸ் கொள்கையிலிருந்து ஒருவித மாறுதலும் இராது. பெரிய மாறுதல்கள் தேசத்தில் உண்டாகப் போகிறது என்று பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றல் தேசத்தின் நாடியைப் பார்த்து வைத்தியம் சொல்லும் காந்திஜி, ஆலோசனை சொல்லத் தயாராக இருக்கிறர்.

(4) சமஸ்தானங்களில் இவ்வருஷம் காங்கிரஸ் இயக்கம் வலுப்பட்டு சுயேச்சை இயக்கம் பலமடையும் என்ற நம்பிக்கை உண்டாகி யிருக்கிறது.

(5) எல்லாவற்றிலும் முக்கியமாக, காங்கிரஸிலுள்ள சில குறைகளையும், குற்றங்களையும் போக்கி தூய்மையாக்க அஸ்திவாரம் போட்டாகி விட்டது.

(6) அதைவிட முக்கியமாக, காங்கிரஸில் சில நாட்களாக இருந்த அபிப்ராய பேதம் தெளிந்து ஒற்றுமை உண்டாகி யிருக்கிறது.

இனிமேல், காங்கிரஸ் செய்த தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு பொது ஜனங்களிடம்தான் இருக்கிறதென்று குறிப்பிடத் தேவையில்லை. திருபுரியில் ஏற்பட்ட அந்த ஒற்றுமை தேசமெங்கும் பரவி வேர்விடும் என்பதில் சந்தேகமில்லை. மகாத்மா காந்தியின் தலைமையில் அஹிம்ஸைப் பாதையில் நாம் இவ்வருஷம் வெகு தூரம் சென்று சுதந்திர லக்ஷியத்தை அடைவோம் என்று நம்புகிறோம்.

குறிப்பு

# எங்கும் அதே பேச்சு

காந்திஜியின் புது இயக்கம் ஆரம்பித்தும் ஆரம்பிக்காதது மாகத்தான் இருக்கிறது. ஆனால் சமஸ்தானங்களைப்பற்றியும் சுதந்திரத்தைப்பற்றியும் சமஷ்டியைப் பற்றியும் தான் எங்கும் பேச்சாக இருக்கிறது. தெற்கே ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் தன் சமஸ்தானம் பிறர் தலையிடுதலை அனுமதிக்காது என்று கர்ஜிக்கிறார். நடுவில் காந்தீயத்தைப் பற்றியும் அஹிம்சையைப்பற்றியும் உபவாஸ தத்துவத்தைப்பற்றியும்கூட தன் அபிப்பிராயத்தை எடுத்து வெளியே விடுகிறார். வடக்கே சமஸ்தானாதிபதிகளே புது டில்லியில் கூடிப் பேசுகிறார்கள். அவர்கள் கூட்டத்திற்கு வைஸ்ராய் தலைமை வகித்துப் பேசிய பொழுது சமஸ்தானாதிபதிகள் காலத்தை அனுசரித்து உடனே தாராளமாக சீர்திருத்தங்கள் செய்ய முன்வர வேண்டும் என்றும், சிறு சமஸ்தானங்கள் ஒன்று சேரவேண்டு மென்றும் புத்திமதி கூறினார். இதைக் கேட்டதும் சில சிறு சமஸ்தானங்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்ததுபோல இருந்ததாம்.

காந்திஜி வேறு வைசிராயைச் சந்தித்துப் பேச புதுடில்லி போய்விட்டார். இது வெளி வருவதற்குள் பேச்சுகள் முடிந்து விடும். அவை ராஜ்கோட்டைப் பற்றிமட்டும் இருக்காது என்பது நிச்சயம். பொதுவாக எல்லா சமஸ்தானங்களுக்கும் பொருந்தும் படியாகவே இருக்கும் என்று தீர்மானமாகச் சொல்லலாம்.

கல்கத்தா சர்வ கலாசாலையில் அரசியல் விவகார நிபுணர் ஸ்ரீ மார்கன் சமஷ்டியைப் பற்றிப் பேசவந்தவர் காங்கிரஸ் சமஸ்தான இயக்கத்தைப் பற்றி கூட ஏதோ அளக்கிறார். சமஸ்தானங்களிலும் சுயஆட்சி வர வேண்டு மென்று காங்கிரஸ் முயற்சி செய்வது வீணும்; நடக்காத காரியமாம். ஸ்ரீமார்கன் பெரிய சட்டநிபுணர் என்பதில் சந்தேகமில்லை; காங்கிரஸின் இயக்கத்தைப்பற்றி அவர் கூறுவது மட்டும் சுத்தப் பிசகு. சமஷ்டி பிரவேசனத்திற்கு ஒரு நிபந்தனையாக சமஸ்தானங்களில் சுயஆட்சி வரவேண்டும் என்பது நடக்காது என்கிறார். காங்கிரஸ் சமஸ்தானங்கள் சுய ஆட்சி இயக்கத்தை ஆதரிக்கிறது, சமஷ்டி பிரவேசத்தை உத்தேசித்து அல்ல என்பதை அவர் உணர வேண்டும். சமஷ்டியில் பிரவேசிப்பதற்காகவா பிரிட்டிஷ் இந்தியா சுய ஆட்சி திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது? இல்லவே இல்லை.

## பொது விற்பனை வரி

பொது விற்பனை வரி மசோதா பிரசுரமாகி விட்டது; நாட்டில் அதை எதிர்த்துக் கிளர்ச்சியும் கூட நடக்கிறது. எதிர்ப்பு மூன்றுவகையாக இருக்கிறது. எதிர்க்க வேண்டு மென்பதற்காகவே ஏற்பட்டிருக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் எதிர்ப்பு ஒன்று. அதற்குக் காரணங்கள் வேறொன்றுமே தேவையில்லை; காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாஎன்ற ஒரு காரணமே போதும். வர்த்தகர்களின் எதிர்ப்பு, அதாவது அந்த வரியில் பாதிக்கப் படுவோம் என்ற பயத்தால் சுய நலத்துடன் கடையடைப்புகள் செய்து கிளர்ச்சி செய்யும் எதிர்ப்பு மற்றொன்று; ஒரு விதமான பற்று மின்றி இந்த வரி நாட்டின் வர்த்தக அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் கெடுதல் என்று ஆட்சேபிக்கும் எதிர்ப்பு மூன்றாவது.

வரி என்றால் அது யாருக்கு விழுகிறதோ அவர்கள் எதிர்க்கிறதில் ஆச்சரியம் ஒன்று மில்லை. ஆனால் வரியில்லாமல் அரசாங்கம் எப்படி நடக்கிறது? யாராவது கொடுத்துத் தானே ஆகவேண்டும்? அதில் யார் கொஞ்சமாவது அதைத் தாங்கக் கூடியவர்களோ அவர்களுக்கு அந்த வரிச்சுமையை மாற்றுவது என்பதுதான் இந்த வரி விதிப்பின் கொள்கை.

ஆனால் இந்த வரியைப்பற்றி சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி நடத்த வேண்டியதும் அவசியம்தான். காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் இப்பொழுது வேலை இருக்கிறது. இந்த வரியைப் பற்றி அவர்கள் தீவிரமாகப் பிரசாரம் ஆரம்பிக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த வரியால் பாதிக்கப்படாதவர்க ளெல்லாம் கூட கிளர்ச்சி செய்யக்கூடும். எந்தெந்த விற்பனைகளின் மீது வரி ஏற்படப் போகிறது என்பது தெரியாததாலும் நிலைமை கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. செலக்ட் கமிட்டியும் இதைப்பற்றி தீர ஆலோசிக்க வேண்டிய திருத்தங்கள் செய்யும் என்று நம்புகிறோம்.

## நீரோவின் பிடில்

ரோமாபுரி நெருப்புப் பற்றி எறிந்து கொண்டிருந்தபோது நீரோ என்ற அந்த ரோம அரசன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தான் என்ற பழமொழியை அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். தமிழில் கூட சற்றுக் கொச்சையான ஒரு பழமொழி உண்டு. "வீடு பற்றி எரிகிறபோது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானாம்" என்ற பழமொழியை மிகவும் சகஜமாக நாம் உபயோகிக்கிறோமல்லவா? இப்படிச் சுருட்டுக்கு நெருப்புக் கேட்டவனையும் நீரோவையும் நல்லவர்களாக்கி விட்டார்கள், ஸ்பெயின் தேசத்திலுள்ள பொதுவுடமை வாதிகள். ஸ்பெயின் சர்க்காரை நசுக்க பிராங்கோ மாட்ரிட் வாசலில் முற்றுகை போடுகிறார். ஆனால் நகரத்துக்குள்ளும் சர்க்கார் வசமுள்ள பிரதேசங்களிலும் பொதுவுடமைக் காரர்கள் கிளர்ச்சி செய்து சர்க்காரைக் கைப்பற்றப் பார்க்கிறார்கள். நீரோவைப் போல இவர்கள் எதிரி கோட்டை வாசலில் நிற்கும் போது வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தால் கூட அதை நாம் பாராட்டமாட்டோம். ஆனால் தங்களுக்காக சண்டைபோடும் சர்க்காரையே எதிர்த்தால்—அதுவும் எதிரியோடு யுத்தம் செய்யும் செய்துகொண்டிருக்கும் வேளையில்—நாம் அவர்களை பைத்தியக்காரர்கள் என்று சொல்லுவதா, அல்லது சனியன்கள் என்று சொல்லுவதா, என்பது தான் தெரியவில்லை. இந்தக் குழப்பத்தில் பிராங்கோ இன்னும் சில நாட்களில் மாட்ரிட்டைப் பிடித்து விட்டார் என்று செய்தி வந்தால் அதில் ஆச்சரியம் இராது. சுயேச்சைக்காகப் போராடும் நமக்கு இந்த ஸ்பெயின் குழப்பம் ஒரு பாடத்தைக் கற்பிக்கும். தேசத்தை மிகவும் முக்கியமான சமயங்களில் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் சர்க்கார் தாசர்களான தலையாட்டிகள் தான் என்பதில்லை. தேச பக்தர்கள் என்று சொல்லிக் கொண்டு தேசத்தின் ஒற்றுமையை முக்கியமான சமயங்களில் குலைக்கிறார்களல்லவா, அவர்கள்தான் சர்க்கார் தாசர்களைக் காட்டிலும் பரம தேசத்துரோகிகள்.

## ஜெக்கோ ஸ்லோவாகியா

ஜெக்கோஸ்லோவாகியாவைப் போல துர்ப்பாக்கிய தேசம் வேறு ஒன்றும் இல்லை. சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடியில் ஏதோ ஈசனருளால் தப்பிப்பிழைத்தது. ஆனால் மறுபடியும் ஓர் ஆபத்து வந்துவிட்டது. ஸ்லோவேகியா செக் தேசத்திடமிருந்து பிரிந்து போக ஆசைப்படுகிறது. அந்த ஆசையைத் தூண்டிவிட்டது, ஜெர்மனிதானென்றும், ஐரோப்பாவில் தன் அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொள்ளச் செய்யும் மற்றொரு முயற்சி தான் என்றும் ராஜ தந்திரிகள் கூறுகிறார்கள். ஹிட்லர் ஸ்லோவேகியாவை ஆதரிக்கிறார். செக் ஹிட்லருக்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறில்லை. ஆகவே மகா யுத்தத்துக்குப்பின் உண்டான ஓர் சிறிய குடியரசின் மற்றொரு அங்கமும் வெட்டப்படுகிறது. இந்தக் கொடுமையை ஐரோப்பா பார்த்துக்கொண்டிருக்கிறது. ஜனநாயகங்கள் வழக்கம்போல ஒரு ஆக்ஷேபனைகூட இந்தத் தடவை செய்யவில்லை! ஸ்லோவேகியா தனியாகப் போவதால் ஹிட்லர் ஆதிக்கம் இன்னும் ஐரோப்பாவில் பல மடையப் போகிறது. சர்வாதிகாரிகள் ஆதிக்கம்வளர வளர ஜனநாயகங்களின் நிலைமை என்ன ஆகும்? ஒரு ஆகாயத்தில் இரண்டு சூரியன்கள் இருக்க முடியாதல்லவா?

### விசேஷ அறிக்கை

முனிசிபல் எல்லைக்குட்படாத கிராமப் பிரதேசங்களில் ஐந்து சந்தாதாரர்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பருக்கு ஒரு வருஷத்திற்கு 'பாரத மணி' இனமாக அனுப்பப்படும்.

மானேஜர்.

# போகிற போக்கில்



பருப்பில்லாமல் திருபுரியில் கலியாணம் நடக்கிறதென்று சென்றவாரம் எழுதியிருந்தேன். பருப்பில்லாமல் மாத்திரமில்லை. உப்பு இல்லாமலும் கலியாணம் நடந்து, சமாராதனை முடிந்து, முகூர்த்தம் நிறைவேறிவிட்டது. ஆசீர்வாதம் கூட நடந்து, கட்டுசாதக்கூடை வைத்து சம்பந்திகளை ரயிலேற்றி விட்டாய் விட்டது. ஸ்ரீமான் சேத் கோவிந்த தாஸிற்கு இந்த வருஷம் காங்கிரஸ் கலியாண கலாட்டாவில் ஏராளமான சிரமம். இந்தத்தடவை மிக்வும் முரட்டு சம்பந்திகளாய் நேர்ந்து விட்டார்கள். ஆனால் இவ்வளவு சண்டையும் குழப்பமும், குழந்தை காமாக்ஷியின் எதிர்கால க்ஷேமத்தை உத்தேசித்து, சீர்வகையரு பிரேரணை இவ்வளவு கடுமையாய் நடத்தப்பட்டதால்தான் என்று சொல்லுகிறார்கள்.

சூரத்து காங்கிரஸிற்குப் பிறகு திருபுரியில்தான் இவ்வளவு திண்டாட்டம். ஆனால் ஈசன் அருளால் எல்லாம் சுகமாய் முடிந்து விட்டது. வேற்றுமையில் ஒற்றுமை பிறந்து விட்டது. யார் கப்பல் ஓட்டைக்கப்பலென்று ஒருவர் மற்றொருவர் மரக்கலத்தைக் குத்திப்பார்த்தும் கப்பல் ஓட்டையாகவில்லை. மகாத்மாவின் உண்ணாவிரதம்—தாரக மந்திரம். இந்த வாரம் இதற்குமேல் நம்முடைய ஓட்டைக் கப்பல்களைப்பற்றி நான் எழுதப்போகிறதில்லை. கொஞ்சம் லௌகிக விஷயமாய் எழுதலாமென்று நினைக்கிறேன்.

* * *

இன்றைய தினம் காலையில் என்னுடைய பூர்வாசிரம ஞாபகம் எனக்கு வந்திருக்கிறது. நான் வக்கீலாக இருக்கும் வரையில் நான் நெருங்கிப் பழகிய நண்பர் ஒருவருக்கும் ஜட்ஜ் வேலை ஆகவில்லை. சிலர் கொஞ்சம் பிரயாசையெடுத்து 'காலர்' 'நெக் டை' எல்லாம் போட்டுப் பார்த்தும் 'குட்டி ஜட்ஜ்'கூட ஆகவில்லை. என் துரதிர்ஷ்டம்தான் அது.

நான் ஹைகோர்ட்டை விட்ட ஆறு மாதத்திற்கெல்லாம் ஏறத்தாழ சம வயதுள்ள என் நண்பர்கள் இருவர்களுக்கு ஜட்ஜ் வேலையாய்விட்டது. ஜட்ஜென்றால் மாதச் சம்பளம் ரூபாய் நாலாயிரம். இதனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் கணக்கு வழக்கேயில்லை. ஒரு புது ஜட்ஜுக்கு சுமார் இருபத்தைந்து (டின்னர்கள்) சாப்பாட்டு விழாக்களுண்டு. இதற்கென்றே சில வக்கீல்கள் பிறந்திருக்கிறார்கள்— போடுவதற்கும் சரி, சாப்பிடுவதற்கும் சரி. படமெடுக்கும் பொழுது முதற் பத்தியில் வந்து நிற்க பிறந்திருப்பவர்கள் போல இலை போட்டால் இவர்களை முதல் முதலில் காணலாம். இந்த உயர்தர வகுப்பைச் சேர்ந்த கூட்டத்தை யண்டி பிழைத்தவனில் நான் ஒருவன். ஆசிரியர் ஆனதில் 'காலி புருபு'ம் பேபரும் சேர்ந்த விருந்துதான். மொழியின் பொய்ச்சுவைதான். விருந்து விழாவில் இலவசமாய் பிறந்த உண்மையான ஜிலேபியும், ஹல்வாவும் பறந்தோடிப் போய் விட்டது.

எதிர்பாராமல் பாக்யம் வரவேணுமென்று சொல்லுவது வழக்கம்—விளா மரத்தடியில் கையில் விழும் விளாம்பழம் போல், கல்லை விட்டு எரியாமல் தானகவே காம்பு பழுத்து நழுவி பழுத்த பழமாய் காற்றில் மடியில் விழவேணும். எதிர் பார்த்து, வேண்டி, வேலை செய்து கிடைக்கும் வேலை என்ன வேலை? இந்த பாக்யம் பெற்றவர்கள் உயர்தர வேலைகளிலும் கூட சிலரே.

கனம் ஜட்ஜ் வரதாசாரியாருக்கு இதே ஓர் பெரிய பாக்யம்.

கனம் ஜட்ஜ் சோமய்யா அவர்களுக்கும் கனம் ஜட்ஜ் பதஞ்சலி சாஸ்திரியாரவர்களுக்கும் அதே பாக்கியம். தேடாமல் கிடைத்த வேலையே ஈசனிட்ட வேலை. ஈசனருளால் கிடைத்த கனி. எனக்கு விருந்துகள் தப்பிப் போனாலும் போகட்டும், என்மனமார்ந்த களிப்பையும், வணக்கத்தையும் இந்த இரண்டு உண்மையான மணிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளமையில் பக்குவமான காலத்தில் தகுந்த பதவி கிடைத்திருக்கிறது. இவர்களுக்கு ஈசன் நியாய வழியில் அருள் புரிவாரென்று நம்புகிறேன். நியாயாதிபதியின் தொண்டு உத்தமமான தொண்டு. காற்றுப் பைகள் (லங்க்ஸ்) தேக பரிசுத்தத்திற்கும் வாழ்விற்கும் எப்படி அவசியமோ, அப்படியேதான் அரசாட்சிக்கு நியாயாதிபதிகளும், நியாய ஸ்தலங்களும்.

பல குணங்களைப் பலர் பாராட்டுகிறார்கள். ஆனால், நான் ஒருகுணத்தை மிகவும் பாராட்டுகிறேன். பிறரைப் பற்றி நல்லது சொல்லாவிட்டாலும், தோஷத்தையே சொல்லாமலிருப்பது ஓர் சிறந்த குணமல்லவா? இது நமது தமிழ்நாட்டில் மிக்க சிரமமான காரியம். சொல்லாமலிருப்பது அரிது. நாக்கு எப்பொழுதும் துருதுருவென்று நிற்கும். அதுவும் போட்டி பந்தயத் தொழிலாகிய வக்கீல் தொழிலில் கேட்கவும் வேணுமா? மிக்க அரிது. இந்த குணம் வாய்ந்தவர்கள் இதர ஜனங்களில் நூற்றுக்கு ஐந்துபேர் உளரென்றால், வக்கீல்களில் 1000-க்கு ஐந்து பேர் தான் அகப்படுவார்கள். இப்பொழுது ஜட்ஜான இருவரும் பிறரைப்பற்றி பரிகாசமாவாவது பேசி வம்பு வளர்த்தார்களென்று, நான் சென்ற இருபது வருஷ காலமாய் ஹைகோர்ட்டில் ஓடியாடி வந்த பொழுது கேட்டதுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. பரம சாந்தர்கள். தெளிவான சட்டக் கல்வியையும் புத்தியையும் உடையவர்கள். எப்படி பிரதம நியாயாதிபதியும், கவர்னர் துரையவர்களும் நமது ஹைகோர்ட்டு பெருங்கூட்டத்தில், இவர்களைப் பொருக்கி எடுத்தார்களென்று எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

ஹைகோர்ட்டில் சட்டம் யாருக்குத்தான் தெரியாது? இன்றையதினம் அட்வகேட் ரிஜிஸ்டரில் சேர்க்கப்பட்டவர்களுக்குக்கூடச் சட்டம் நன்றாய்த் தெரியும். சுண்ணாம்பு நாமம் போட்டு நிற்கும் ஹைகோர்ட் சுவர் செங்கல்லுக்குக்கூட 42 எம். எல். ஜேயின் மகிமை நன்கு விளங்கும் — ஹைகோர்ட்டில் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு பாக்கிச் சுண்ணாம்பை சுவற்றில் தடவாதவர் யார்? வேறு வேலை என்ன? 'டிபன்' சாப்பிட்ட பிறகு வெற்றிலை போடவேண்டாமா? அதுவும் இப்பொழுது, நான் கோர்ட்டை விட்ட பிறகு 'டிபன்' வக்கீல் மார்களின் சொந்த பொருப்பிலேயே நன்றாய் நடப்பதாகக் கேள்வி — 'பிளானல்' காபியும், வெண்ணை உருக்கின நெய்யில் பக்ஷணங்களும்! இதனால் எனக்கென்ன லாபம், ராஜாஜிக்கும் எனக்கும் இந்த சுகங்களெல்லாம் இனிமேல் ஏது? அவருக்கு 'பைலும்', எனக்கு 'புளுபும்' தான் 'டிபன்'!

* * *

போட்டியிலும், பந்தயத்திலும், பரிசிலும், ஆழ்ந்து உயிரிழந்து நிற்கும் நமது வாழ்விலும், பல தொழில்களிலும் 'உண்மை' மனிதர்கள் தலைவர்களாகித் தொழில் முன்னேற்றம் அடைந்ததென்று கேள்விப்பட எவ்வளவு சந்தோஷம் உண்டு? சாந்தமும், தன்மையும், பெருமையும், விசால மனப்பாங்கும், உண்மையும், பிறரை ஆதரிக்கும் சுபாவமும் உள்ளவர்களல்லவோ அந்தந்தத் தொழிலில் முன்னேற்ற மடையவேண்டும்? அப்பொழுது தானே நாட்டிற்குக்ஷேமம்; வாழ்விற்கு உயர்வும், உயிரும்?

—மணி.

# வார நடப்பு

திரிபுரி காங்கிரஸ் இனிது முடிவடைந்தது. சுபாஷ் சந்திரபோஸ் உடல் நலம் குன்றியதால் மௌலானு அஸாத் காங்கிரஸுக்குத் தலைமைவகித்தார். காங்கிரஸ் நடந்த நான்கு தினங்களும் உணர்ச்சி மிகுந்த பிரசங்கங்கள் செய்யப்பட்டன. ஜவஹர் சிலர் காலித்தனமாக நடந்து கொண்டதற்காக மனம் வருந்திச் செய்த உருக்கமான பிரஸங்கம்தான் தலைசிறந்தது. அவர், ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றும் வரும் போருக்குத் தயாராக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சுமார் இரண்டு லக்ஷம் ஜனங்கள் காங்கிரஸுக்கு வந்திருந்தார்கள்.

உண்ணு விரதத்தை முடித்த காந்திஜீயின் உடல் நிலை அபிவிருத்தி அடைந்திருப்பதாக அறிகிறோம். சென்ற புதனன்று காந்திஜி வைஸ்ராயைச் சந்தித்து சமஸ்தானப் பிரச்னை சம்பந்தமாக விவாதித்தார். இந்த சந்திப்பால் இந்தியாவில் அமைதியும் முன்னேற்றமும் உண்டாகும் என்று நம்ப இடமிருக்கிறது.

வைஸ்ராய் மன்னர் சபைக்குத் தலைமை வகித்து ஓர் அரிய பிரசங்கம் செய்தார். வழக்கம்போல் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்ளாமல் இந்தத் தடவை இந்த வைபவம் 'புது தினுசாக' இருந்தது. வைஸ்ராய் தமது பிரசங்கத்தில் மன்னர்கள் 'காலத்தை ஒட்டி' வாழ வேண்டுமென்றும் பிரஜைகளின் அபிலாஷைகளைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்றும் சொன்னார். மன்னர்கள் முகத்தை 'கடு கடு' வென்று வைத்துக் கொண்டு இதைக் கேட்டார்களாம்.

பீஹார் மகாண முஸ்லீம் லீக் ஓர் அபூர்வமான தீர்மானத்திற்கு வந்திருக்கிறார்கள். அந்த மாகாணத்தில் வார்தா திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக பயமுறுத்துகிறார்கள்.

திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் வார ஆரம்பத்தில் போலீஸ்படைகள் முன்னிலையில் காங்கிரஸைத் தாக்கி ஓர் வீரமான சொற்பொழி வாற்றினர். கோபமான வார்த்தைகள் மாரிபோல் பொழிந்தன. காந்திஜியிடம் தனக்குள்ள அன்பையும், ஆனல் அவர் கொள்கைகளிலும் முறைகளிலும் தனக்குள்ள துன்பத்தையும் வெளியிட்டார் ஸர் ஸி. பி.

ஐரோப்பிய நிலைமை நாளுக்கு நாள் சிக்கலாகிக்கொண்டு வருகிறது. திடீரென்று ஒரு நாள் ஸ்லோவாகியர்கள் ஸெக் தேசத்திடமிருந்து பிரிந்துபோக வேண்டுமென்று ஓர் இயக்கத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இதுவரை ஸெக்கோவும் ஸ்லோவேகியாவும் ஒன்றாயிருந்தது. இந்த ஒற்றுமையைக் குலைப்பதற்காக சிலரால் இந்தச் சூட்சி செய்யப்படுகிறதென்று அயல் நாடுகள் நினைக்கின்றன. ஹிட்லர் ஸ்லோவாகியர்களை ஆதரிக்கிறார். ஸ்லோவாகியாவுக்குச் சுயேச்சை கொடுத்துவிட வேண்டுமென்றும், அது போதாதென்று ஸெக் மந்திரி சபையையே மாற்றியமைக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருக்கிறார். ஸெக்தேசம் ஹிட்லருக்குத் தலை வணங்குவதைத் தவிற வேறு என்ன வழி இருக்கிறது ?

ஸ்பெயினில் சர்க்கார் வசங்களிலுள்ள பிரதேசங்களிலேயே ஒரு 'குட்டிக் கலகம்' நடக்கிறது. சர்க்காரை பொதுவுடமைக்காரர்கள் எதிர்க்கிறார்கள், வாசலில் எதிரி முற்றுகை போடும்போது! பிராங்கோ மாட்ரிட் தலைநகரை முற்றுகைபோடத் தொடங்கி விட்டார்.

சாதாரணமாக மௌனமாக உள்ள ஸ்டாலின் இவ்வாரம் வாயைத்திறந்து ஜெர்மனியைத் தாக்கினார். ஒரு அறைக்கு இரண்டு அறையாக பதில் கொடுக்க முடியும் என்று கூறினர்.

ஜெர்மனியில் பைத்தியக்காரர்கள் நிறைய இருக்கிறார்களென்றும் ஆனல் அவர்களுக்குப் பதில் சொல்ல யுத்த வீரர்கள் ரஷ்யாவில் இருக்கிறார்களென்று மரியாதையாக எடுத்துக் காட்டினர் ஸ்டாலின்.

ஜெருஸலத்தில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் அராபியர்களுக்கும் சண்டை நிகழ்ந்த வண்ணமாக இருக்கிறது.

# சாமியா பூதமா?

(ஸ்ரீ டி. எஸ். ராமானுஜம், எம். ஏ., எல். எல். பி.)

தென்னிந்தியாவில் ஒவ்வொரு கிராமத்திலும் பல கோவில்களிருக்கின்றன. அதைக் கொண்டே நமது தெய்வ பக்தி வெளியாகிறதல்லவா? இடறி விழுந்தால் ஒரு விஷ்ணு கோவில், ஒரு சிவன் கோவில், ஒரு பிள்ளையார் கோவில், அல்லது ஒரு பிடாரி கோவில். நாகரீகம் பெற்ற சென்னைப்பட்டினத்தில்கூட கோவில்களுக்குக் குறைவில்லை. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இக்கோவில்களை அண்டிப் பிழைக்கிறார்கள். லக்ஷக்கணக்கான ஜனங்கள் இக்கோவில்களிலிருக்கும் சிலைகளைத் தரிசனம் செய்து மனச்சாந்தி அடைகிறார்கள்.

ஸ்தலங்களின் இயற்கை அமைப்பைச் சொல்லி முடியாது. கோபுரங்களின் சிற்ப அழகை வெள்ளைக்காரர்கள் எடுத்திருக்கும் போட்டோக்களிலிருந்தும் எழுதியிருக்கும் புத்தகங்களிலிருந்துமே நாம் உணர்ந்து கொள்ளலாம்! நமது பெருமையை அன்னியர்கள் ஆண்டு அனுபவிக்கும் போதல்லவா நமக்கு ஓர் அளவில்லா உற்சாகமும் தற்புகழ்ச்சியும் கிளம்புகிறது? இதற்கும் ஒரு நியாயமுண்டு. ஐரோப்பாவில் ஆணும் பெண்ணும் சேர்ந்து நடனம் செய்கிறார்களல்லவா? ஏன்? தன் மனைவி மற்றொருவனுடன் குதிக்கும் போதல்லவா கணவனுக்கு அவள் அழகும் பெருமையும் நன்றாய்த் தெரிய வருகிறது? அதுபோல பாரதமாதாவின் சௌந்தரியத்தை இந்தியரல்லாதார் புகழும் போதல்லவா நாம் மீசை முறுக்கி மார்தட்டி, "நம் நாகரீகமல்லவோ நாகரீகம்! இந்தியாவின் பழமையையும் பெருமையையும் யார் மறுக்க முடியும்? அதைத்தானே இவ்வளவு நாளாய்ச் சொல்லிக் கொண்டு வருகிறோம்" என்று தைரியமாய்க் கூச்சலிட ஆரம்பிக்கிறோம்?

இக்கோவில்களில் சாக்ஷாத் மஹாலக்ஷ்மி குடி கொண்டிருக்கிறாள். திருஷ்டாந்தமாக சமீபத்தில் நடந்த திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் "தெப்பல்" உற்சவமொன்றே போதும். என்ன எலெக்டிரிக் விளக்குகள்! என்ன பாண மத்தாப்புகள்! என்ன பூமாலைகள்! ஒருநாள் இரவில் இரண்டு மணி நேரத்தில் சுமார் ரூ. 2000 இவ்விமரிசைகளில் சிலவாயிற்றாம்! சுபகாரியங்களுக்குப் பணம் எப்படியோ கிளம்பி விடுகிறது. தாயுமானவர் "உன்னைச் சிங்காரித்துப் பாராமலே நான் என்னைச் சிங்காரித்திருந்தேனே" என்று கடவுளைப் பார்த்துத் தன்னை நிந்தித்துக் கொண்டாராம். இவ்வித நிந்தைக்குத் துளிக்கூட இடங் கொடுக்காமல் நாம் விக்ரகங்களை அலங்கரித்துக் கொண்டாடுவதின் லக்ஷணத்தை எழுத்துகளால் புகழவும் முடியுமா?

காஞ்சீபுரம் தீர்த்தச் சண்டை கூட நமது தெய்வ பக்தியைத் தானே காட்டுகிறது. வரதராஜன் கோவில் யானைக்கு வடகலை நாமம் போடுவதா தென்கலை நாமம் போடுவதா, என்ற சண்டை ப்ரீவி கௌன்சில் வரையில் போய் தென்கலை நாமம் தான் போட வேண்டுமென்று தீர்ப்பாயிற்றே. என்ன ஆயிற்று? நமது கோவிலின் அந்தரங்கம் ஒரு வெள்ளைக்கார நீதி சபைக்கு அவ்வளவு சுலபமாய்த் தெரியவருமா? யானைமேல் தென்கலை நாமம் போட வேண்டுமென்றாலும், யானை மேல் போடப்படும் துணிகளின்மேல் என்ன நாமம் போடுவது? இச்சண்டை மறுபடியும் ப்ரீவி கௌன்சில் வரையிலும் போய், "யானையென்றால் யானையின்மேல் போடப்படும் துணிகள் உள்பட" என்று அவ்வெள்ளைக்காரச் சபை தீர்ப்பை வியக்தமாய் எழுத நேரிட்டதல்லவா? இதினின்று நாம் தெய்வ விஷயமாய்ப் பணத்தை லக்ஷியம் செய்யாமல் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறோமென்பது தெரியவில்லையா!

நமது தெய்வபக்தியை நன்குணராது சில இங்கிலீஷ் படித்த இந்தியர்கள் சில காலம் முன் "கோவில்களில் ஏராளமான பணம் சேர்ந்திருக்கிறது. இத்திரவியத்

தை ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் முதலிய தேச முன்னேற்ற ஆலயங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும்'' என்ற ஒரு சட்டத்தைப் பிறப்பிக்க முயன்றார்கள். கடைசியில் என்னவாயிற்று? அவர்களின் குருட்டு யோசனைக்கா தெய்வம் இடங்கொடுக்கும்? ரிலிஜியஸ் எண்டௌமெண்ட்ஸ் போர்ட் என்ற சபையை சட்ட மூலமாய் ஏற்படுத்தினார்கள். கோவில்களுக்கு விட்டிருக்கும் சொத்துக்கள் சரிவர பரிபாலிக்கப்பட்டு வருகிறதா என்று அச்சபை மேற்பார்வையிட்டு வர வேண்டும். "ஒவ்வொரு கோவிலும் தன் வரும்படியில் ஒரு சிறு பாகத்தை அச்சபைக்குக் காணிக்கையாய்க் கொடுக்க வேண்டும். அப்பணத்தைக் கொண்டு அச்சபையின் அங்கத்தினர்களும் அவர்களின் அடியார்களும் உஜ்ஜீவிக்க வேண்டும். தர்மகர்த்தாக்கள் இஷ்டப்பட்டால் கோவில் பணத்தை ஆஸ்பத்திரிகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் கொடுத்து உதவிசெய்யலாம்'' என்பதைத் தவிர சென்னை சட்டசபை வேறு ஏதாகிலும் கோவில் சொத்தைப்பற்றிச் செய்ய சாமி ஒப்புக்கொண்டதா? எண்டௌமெண்ட்ஸ் போர்ட் அங்கத்தினர்கள் மோட்டார் காரில் போய்க்கொண்டிருக்கிறார்கள். தர்மகர்த்தாக்கள் மாமூல்படி உற்சவங்களைச் செய்து பேரானந்த மடைகிறார்கள். ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் இத்தகைய சின்ன விஷயங்களுக்கா கோவிற் சொத்து ஏற்பட்டது?

நமது தெய்வபக்தியின் அழகை இன்னும் சற்று விவரிப்போம். "கோவிலுக்குப் போய் தெய்வத்தைத் தரிசித்து வருவேன்'' என்றால் வேறு இடத்தில் தெய்வமில்லையா? நமது வேதங்களும் உபனிஷத்துகளும் மனிதனின் ஹிருதய கமலத்திலேயே கடவுள் இருக்கிறார் என்கின்றனவே. "கடவுள் எங்குமிருக்கிறார், தூணிலேயும் இருக்கிறார், துரும்பிலேயுமிருக்கிறார்'' என்று நரசிம்ஹபுராணம் சொல்லுகிறது. இவ்விதக் கேள்விகளைக் கேட்கும் பொழுதுதான் நமது கோவில்களின் சூக்ஷ்மம் வெளிப்படுகிறது. கும்பாபிஷேக மந்திரம் சம்ஸ்கிருதத்திலிருந்தபோதிலும், அதன் அர்த்தம் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. அது என்ன சொல்லுகிறது? கும்பாபிஷேகம் பண்ணிவைப்பவன் கங்கணம் கட்டிக்கொண்டு தன் உயிரை ஒரு ஜலக் குடத்தில் "ஆவாகனம் செய்கிறேன்'' என்று வாக்குத்தானம் செய்து சில சடங்குகளைச்செய்து முடிக்கிறான். அவைகளை அவன் மனப் பூர்ணமாகச் செய்திருக்கும் பக்ஷத்தில் நாற்பதாவது நாள் அவன் இறந்து போகிறான். அவன் பூதம் கோவில் சிலையில் ஒட்டிக்கொண்டு அடியார்களுக்குச் சாந்நித்யம் கொடுக்கிறது.

'கடவுள் எங்குமிருக்கிறார்' என்ற வேதாந்த தத்துவம் ஒரு பக்கமிருக்கட்டும். கோவிலிலிருக்கும் பூதம் எங்குமிருக்க முடியுமா? அதனால்தான் கோவிலுக்குப்போய் சிலையை வணங் வேண்டியிருக்கிறது. "என் வியாஜ்யம் ஜயித்தால் உனக்கு இரண்டு தேங்காய் உடைக்கிறேன். என் வியாதி போனால் உனக்கு என் சிகையைத் தருகிறேன். என் எதிரி கஷ்டப்பட்டால் உனக்கு இரண்டு ஆடு வெட்டுகிறேன்'' என்று சிலையை அண்டி நிற்கும் பூதத்தை வேண்டிக்கொள்ளுகிறோம். நமது எண்ணம் நிறைவேறாவிடில் இத்தேங்காயைக்கூட, இச்சிகையைக்கூட நாம் அர்ப்பணம் செய்யப்போவதில்லை. தெய்வத்தை ஒரு ஏவலாளியாய் நினைத்து "நீ எனக்கு ஒரு காரியம் செய்தால் உனக்கு நான் ஒரு கூலி கொடுக்கிறேன்'' என்று அத்தெய்வத்துக்கு நாம் சொல்வது போலும். இது போகட்டும். அந்த தெய்வந்தான் சும்மா யிருக்கக்கூடாதா? "அடேய், உன் எதிரி செத்துப்போய்விட்டானேடா. எங்கே என் ஆடுகள்?'' என்று சொப்பனத்திலும் ஆவேச மூலமாயும் தெய்வம் தோன்றிக் கேட்கிறது. அப்படிக் கேட்பது தெய்வமா? சமீபத்தில் ஒருவர்மீது ஆவேசம் வந்ததைப் பார்த்தேன். என் குடியானவன் இரண்டு ஆடு பலி கொடுப்பதாக வேண்டிக் கொண்டது உண்மை. அவனிடம் பணமில்லையே. ஆவேசத்தில் சாமி வந்து அவனை ஒழித்து விடுவதாகப் பயமுறுத்துகிறது. அதற்கு அஞ்சிக் குடியானவன் என்னைப் பணம் கேட்டான். நான் ஆவேசம் வந்தவரிடம் சென்றேன். பெருங்கூட்டம் நடுவில் சாமி கூத்தாடிக் கொண்

(701-ம் பக்கம் பார்க்க)




# மிருக சிகிச்சை

(ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி)

நமக்குச் சாதாரணமாக தேக அசௌகர்யங்கள் ஏற்பட்டால் அப்போது செய்து கொள்ளவேண்டிய சிகிச்சையே நமக்குத் தெரியாது. டாக்டர்களிடம் போக வேண்டுமென்று நினைக்கிறோம். டாக்டர்களிடம் போயே ஆகவேண்டிய நோக்காடுகள்தான் கடவுள் ஆக்ஞையால் ஏற்படுகின்றனவே; அப்பொழுது போனால் போதாதா? சில்லரை தேக அசௌகர்யங்கள் ஏற்பட்டபோதும் டாக்டர்களையே எதிர் பார்க்கவேண்டுமா? நாம் சம்பாதிக்கும் சொல்பத்தை டாக்டர்களிடமே கொடுத்துவிட்டால், பின் நாம் சாப்பிடுவதெப்படி?

நமது சொந்த சமாசாரமே இப்படி இருக்க நாம் நமது கால் நடைகளைப்பற்றியா கவனிக்கப் போகிறோம்? நமக்கு நோய் கண்டவுடன் டாக்டர்களிடமாவது போகத் தோன்றுகிறது. கால் நடைகளுக்கு நோய் கண்ட சமாசாரமே தெரியாமல் அவைகளை வேலையில் கட்டி வதைக்கிறோம். ஒரு சமயம் அது தீனி எடுக்காமலும் தண்ணீர் குடியாமலும் இருப்பதைத் தெய்வாதீனமாய் கவனிக்க நேர்ந்தால், நமக்கு ஊரிலிருக்கும் நாவிதனே இடையனே மிருக வைத்திய நிபுணனாகத் தோன்றுகிறான். அவன் சொன்னதைச் செய்து, வியாதி குணமடையாமல், முத்தின பின்பு மிருக வைத்திய சாலையைப்பற்றி நினைக்கிறோம். இப்போது கால்நடை இலாகா ஏற்பாடு செய்திருக்கும் வைத்திய சாலைகள் 25 மைலுக்கு ஒன்று கூட இல்லை. தற்காலத்தின் நிலைமையோ சொல்லவேண்டியதில்லை. நமது வசதிகளை உத்தேசித்து டாக்டரிடமும் போகாமல், கடைசியாக இலேசாக வந்த வியாதி கடினமாகி மாடு இறந்து விடுகிறது. சமீபத்திலிருக்கும் வைத்திய சாலைக்குத்தான் கொண்டு போனாலும் நாட்டு வைத்தியரின் மருந்து காரணமாகவோ, கால தாமதத்தாலோ இங்கேயும் முடிவு ஒன்றே ஆகிறது. ஆகையால், சிற்சில விபத்து நேர்ந்த சமயத்தில் மாட்டை டாக்டரிடம் கொண்டு போவதற்கு முன், உபசாந்தியாக முதற் சிகிச்சை செய்யத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்குச் சில ஔஷதங்களும் அவைகளின் சாதாரணப் பிரயோகங்களும் தெரிவது முக்கியம். இவைகளைத் தெரிந்து கொள்வதற்குமுன் கால்நடைகளின் தேக அமைப்பு இயற்கைக் குணங்கள் போன்ற சில முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். தேக அமைப்பைப் பற்றி சில முக்கியமான விஷயங்களைக் கவனிப்போம்.

1. மாட்டை அணுக வேண்டிய சமயத்தில் அதன் முன் பாகத்தில் தான் பக்கவாட்டில் போகலாம். பின் பாகத்தில் பக்கவாட்டில் நெருங்கக்கூடாது. பின் பக்கத்தில் குதிரைகளை பக்கவாட்டில் நெருங்கலாம். இதற்குக் காரணம் தொடையில் உள்ள எலும்புப் பூட்டில் குதிரைக்கு இருக்கும் ஒரு நரம்பு மாட்டிற்கில்லை. இதனால் மாடுகளுக்கு கால்களை பக்கவாட்டில் வீசி உதைக்க முடிகின்றது. குதிரைக்கு முடியாது. கால்களைப் பின்னால் பலமாக வீசி உதைக்கும். பக்கத்தில் உட்கார்ந்து பால் கரக்கவேண்டிய பசுவுக்கு இந்த நரம்பை இல்லாது செய்து, பால் கரக்கவேண்டாத குதிரை கழுதைகளுக்கு இந்த நரம்பைக் கொடுத்து அப்படி உதைக்க இயலாது பண்ணின கடவுளின்

நோக்கத்தை ஆழ்ந்து கவனித்தால், பசுவிற்குப் பால், தன் கன்றின் போஷணத்திற்காகக் கொடுத்தருளினர் என்றும், தன் உபயோகத்திற்கு எல்லாப் பாலையும் பீச்சிக் கொண்டு கன்றுக்கில்லாமல் துரோகம் செய்யும் மனிதனுக்கு உதைதான் கொடுத்தானென்றும் விளங்கும்! மனிதனுக்கு அணை கயிறு இந்த பாபத்தைச் செய்ய உதவுகிறது போலும்!

2. குதிரைகள் படுத்துக் கொள்வது மிக்க அரிது. ஆற்றில் மணலில் படுத்துப் புரளுவதையே நாம் சாதாரணமாய்ப் பார்த்திருக்கிறோம். எப்பொழுதும் நின்று கொண்டே தானிருக்கும். அவைகளுக்கு இப்படி சதா நின்று கொண்டிருக்கவும், வேகமாய் வெகுதூரம் ஓடவும், எவ்வளவு களைத்திருந்தாலும் நின்று கொண்டே ஆகாராதிகளை உட்கொண்டு சிரம பரிகாரம் பண்ணிக் கொள்ளவும் கடவுள் உதவி புரிந்திருக்கிறார். நாலு கால்களிலும் பின் பாகத்தில் முழங்காலிலிருந்து கீழே பிடி வரை இரண்டு கெட்டி நரம்புகள் இருக்கின்றன. இவை மேல் சொன்ன சௌகர்யங்களோடு ஒரு சமயம் அடிவயிற்றிலோ, பீஜ பாகத்திலோ ரண சிகிச்சை செய்ய நேரிடும்போதும், 3 வாரம் 4 வாரம் படுக்காமலே இருக்க நேரிடும்போதும் சரீர பளுவைத் தாங்கி களைப்பில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறது.

3. மாட்டின் தலை ஒரு பெரிய எலும்புக்கூடு. இவ்வளவு பெரிய தேகத்திற்கு ஏற்ற பருமனான தலை இல்லாவிட்டால் விகாரமாகக் காணும். கடவுள் சிருஷ்டியே அழகானது; அற்புதமானது. அதில் விகாரத்திற்கிடமில்லை. நாம் செய்து கொண்டால்தான் விகாரம் ஏற்படும். ஆகையால் இவ்வளவு பருமனான தலையைச் சிருஷ்டித்து அதன் பருமனுக்குத் தக்க கனமும் ஏற்பட்டால் கழுத்தினால் அதைத் தாங்க முடியாது. ஆனதால் இந்தப் பருத்த தலையில் பல காலி ஸ்தலங்கள் இருக்கின்றன. இந்தக் காலி ஸ்தலங்கள் மேல்கடவாய்ப் பற்களின் வேர்களோடும், கொம்புகளின் குருத்தின் வேர்களோடும் சம்மந்தப் பட்டிருக்கின்றன.

மேல்கடவாய்ப் பற்களென்று சொன்னேன். அனேகருக்கு, மாடுகளுக்கு மேல் வாயில் முற்பற்கள் இல்லை என்றும் கீழ் வாய் முற்பற்கள் அசைந்து கொண்டிருக்கு மென்றும் தெரியாது. என் சினேகிதர் ஒருவர் ஒருநாள் தன் பசுவின்முன் பற்கள் சில ஆடுகின்றனவென்று சொல்லி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு வந்திருந்தார்!

மேலே சொன்ன காலி ஸ்தலங்கள் தலையில் இருக்கின்ற விஷயம் தெரியாமல் சில தீங்குகளுக்கு மாடுகளை நாம் உள்ளாக்குகின்றோம். இது பின் விவரிக்கப்படும்.

4. மிருகங்களின் தோல் நமதுதோலை விட மிகவும் கெட்டியானது. குதிரையின் தோல் சற்றேறக் குறைய நமது தோலவ்வளவு மெல்லியதே என்றுகூடச்சொல்லலாம். ஆகையால் சர்மத்தில் வேலை செய்யும் மருந்துகள் மாடுகளினிடத்தில் தாமதமாக வேலை செய்யும். தவிர அடர்ந்து வளர்ந்த மயிரால் தோல் மூடப்பட்டிருப்பதால் தேகத்திலிருக்கும் துர்நீர் தோல் வழியாக வெளிவந்து தேகத்தின் உஷ்ணத்தைக் குறைக்கக் கூடிய மருந்துகள் அவ்வளவாகப் பிரயோசனம் தருவதில்லை. மலம், நீர், வியர்வை இம்மூன்றும் தேகத்தின் உஷ்ணத்தை வெளிப்படுத்த முக்கியமானவை. இவற்றில் முக்கியமான வியர்வை வெளிவர வழி இல்லாததால், நம்மைவிட மிருகங்களில் மலஜலம் கழிவது சரியாயிருக்கும்படி பார்ப்பது நமது கடமையாகும்.

5. மாட்டின் வயிறு நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் அறை சாதாரணமாக நான்கு பெரிய வாளிகள் கொண்ட ஆகாரத்தை அடக்கக்கூடியதாயிருக்கின்றது. மற்ற மூன்றும் சிறியவை. இம் முதல் அறைக்குள் போகும் ஆகாராதிகள் ஒன்று சேர்ந்து கலந்து மறுபடி அசை போடுவதற்கு வாய்க்குள் திரும்பிவந்து அசை வாங்கிய பின் முறையே 2-வது 3-வது 4-வது அறைக்குள் செல்லுகின்றது. இந்த அசை போடும் காரணத்தாலும் முதல் அறை மிகப் பெரிதாயிருப்பதாலும், மேல் சொன்ன 4-வது அறையில்தானே, உணவு ஜீரணமாகி, ரத்தத்தோடு கலப்பதாலும் மருந்துகளின் பெரும் பாகம் வீணாகிவிடுகிறது. ஆகையால்தான், நம்மை விடவும் மற்ற மிருக இனங்களை விடவும் அனேக மடங்கு ஜாஸ்தியான அளவு மருந்து உபயோகப் படுத்த வேண்டி வருகிறது. " மாட்டுக்கு

வயிற்றுவலி வந்த மாதிரி தோன்றிற்று. சொஞ்சம் மிளகு, சுக்கு, ஓமம் மூன்றையும் கொடுத்தேன். ஒன்றும் குணம்தெரியவில்லை " என்று சொல்லக் கேட்கிறோம். வேண்டிய அளவு இம் மூன்றையும் கொடுத்திருந்தாலும் குணம் தெரிந்திருக்கும். "வயற்றுவலி மாதிரி" தோன்றினது வயிற்றுவலியாகவே இருந்திருந்தாலும் குணம் தெரிந்திருக்கும்!

6. பகுத்தறிவு இல்லையே தவிர மிருகங்களுக்கும் நம்மைப்போல் மூளை உண்டு. அந்தமாதிரி மூளை சில மனிதர்களுக்குக் கூட இருக்கிறதல்லவா? மிருகங்களின் மூளை முன்பாகம் பின் பாகமாக இரண்டு பாகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. மூளையின் வேலையும் அதேமாதிரி இரண்டு வகைப்பட்டுள்ளது. ஒன்று உணர்ச்சி, மற்றொன்று செய்கை. இவை இரண்டையும் நிரூபிக்க: நாம் மாட்டை அடிக்க நினைப்பது, உணர்ச்சி; கையைத்தூக்கி சாட்டை வாரால் தயை இன்றி அடிப்பது செய்கை. மூளையின் முன்பாகம் உணர்ச்சிக்கும் பின்பாகம் செய்கைக்கும் மூலமாயிருக்கிறது. முன்பாகம் மனிதர்களுக்கு பின் பாகம் மிருகங்களுக்கும் நன்றாய்ப் பெருகி வளர்ந்திருக்கிறது. ஆகையால் முன் இதழில் சொன்னபடி முன் பாகத்தில் மனிதர்களுக்கும் பின் பாகத்தில் மிருகங்களுக்கும் மருந்துகள் சுலபமாகவும் சீக்கிரமாகவும் வேலைசெய்து பயன்தரும். இந்த பாகங்கள் மனிதர்களிடத்தும் மிருகங்களிடத்தும் முறையே சுலபமாய் நோய்க்குள்ளாவதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

---

(698-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தது. என் குடியானவனிடம் பணமில்லை. அவனை ஹிம்சைசெய்து ஆடுகளின் உயிரை வாங்க ஆசைப்படும் நீ தெய்வமா?"என்று அதட்டிக் கேட்டேன். உடனே சாமி மலையேறப் பார்த்தது. நான் விடவில்லை. "நீ என் கேள்விக்குப் பதில் சொல்லித்தான் மலையேற வேண்டும்" என்று ஆணையிட்டேன். அதற்குக் கட்டுப்பட்டு அது சொன்னதாவது: "நான் ஜீவஹிம்சை செய்ய ஆசைப்படவில்லை. இந்தப் பயல் ஒரு வாக்குத்தானம் செய்தான். அந்த வாக்கை நிறைவேற்றுவது அவன் கடமை. அக்கடமையைச் செய் என்று கேட்பது என் கடமை." "ஆடு வெட்டும் பாவம் உனக்கா, என் குடியானவனுக்கா?" என்று மறுபடியும் கேட்டேன். "அவனுக்குத்தான். ஆடு வெட்டு என்று நான் சொல்லவில்லையே. அவன் சொன்ன பேச்சை நிறைவேற்ற வேண்டுமென்று தானே சொல்லுகிறேன்" என்று விடையளித்தது. "ஆடு வெட்டாமல் உனக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொண்டு ஏழைகளுக்குச் சாப்பாடுபோட உத்திரவு கொடுக்கிறாயா?" என்று கேட்டேன். "சரி" என்று சொல்லி சாமி மலையேறி விட்டது. இதிலிருந்து சாமிமேல் ஒரு தப்புமில்லை என்று தெரிகிறதல்லவா? அச்சாமியும் மனித வாழ்க்கையை உணர்ந்த ஒரு பூதந்தானே? அதற்கு நம்மை விடப் புத்தி அதிகமல்லவா? ஆகையால் அது நம்மை ஹிம்சை செய்யாது. அதனால்தான் அதைக் கோவிலில் வைத்துக் கும்பிடுகிறோம். அதற்கென்ன சந்தேகம்!

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# ஜோஸ்யம்!

(ஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.)

"ஏன் ஸார் உங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமாமே?"

"யார் சொன்னு?"

"அதெல்லாம் இருக்கட்டும் ஸார். நம்ம ஜாதகத்தைக் கொஞ்சம் பாருங்களேன்."

"எனக்கு அப்படி ஒண்ணும் ஜோஸ்யத்தில் விசேஷமாய் பரிசயமில்லே ஸார்."

"தெரியும் ஸார்—நான் எல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்ப நீங்க சும்மாத் தானே இருக்கிறேள்? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கோ ஸார். க்லவித்தியாஸமாய் இருக்கு. இந்த சர்வீஸில் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்பட வேண்டியிருக்கு. முட்டாள்பயல்களுக்கு கீழே வேலே செய்ய வேண்டியிருக்கு. ஜாதகத்தை எடுத்துக்கொண்டு வரட்டுமா? நான் ஒத்தரையும் கேழ்க்கிறதில்லே ஸார். ஜோஸ்யன் என்று பெயரை வைத்துக்கொண்டு படுமோசக்காரர்களாய் இருக்கிருர்கள் ஸார்."

"ஆமாம், ஜோஸ்யமே கேட்காதேயுங்கள். ஏதோ நடந்தது நடந்துவிட்டுப் போகிறது."

"அப்படியில்லே ஸார். இந்த ப்ரொபஷனலிஸ்ட்ஸ் இருக்காளே அவர்கள் மோசம். அட்வர்டைஸ்மெண்டு பிரமாதமாயிருக்கு. சொல்லுகிறதெல்லாம் அபத்தம்."

"ஆனல் நீங்கள் யாரையாவது கேட்டீர்களா?"

"அதெல்லாம் ஏன் கேழ்க்கிறீர்கள்? எவ்வளவோ ரூபாய் தொலேந்து விட்டது. எனக்குப் ப்ரொபெஷனல் ஜோஸ்யர் கிட்டயே நம்பிக்கை கிடையாது. நீங்க கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கோ ஸார். ஏதாவது வெடிமோக்ஷமுண்டா? இல்லே இந்த இழவிடுத்த ஸர்வீஸ் தானு?"

"என்ன ஸார், உங்களுக்கு என்ன குறைச்சல்? நல்ல ஸர்வீஸில்தானே இருக்கேள். சம்பளமும் அப்படி ஒண்ணும் மட்டமாயில்லேயே. ஏன் இப்படி அதிருப்திப் படுகிறீர்கள்?"

"சம்பளம் கிடக்குஸார் சம்பளம். நான் பணத்தை லக்ஷியம் பண்ணுகிறதில்லே. உங்களிடம் சொல்லுகிறேன் என் அந்த ரங்கத்தை. எனக்கு எப்போதும் பணம் பெரிசில்லே; மதிப்புன்னு ஸார் வேணும்? இந்தக் காலத்திலே யோக்கியதைக்குத் தகுந்த மதிப்பு யார் ஸார் கொடுக்கிறு? எல்லாம் ஒரு போக்காக இருக்கிறது. அதிருக்கட்டும் ஸார், இதெல்லாம் இப்ப பேசி என்ன பிரஜோனம்? இப்பொழுது ஸுபீரியர் ஆபீஸருக்கும் நமக்கும் லடாயாய் இருக்கிறது. கொஞ்சம் தயை பண்ணுங்கோ ஸார். எனக்கு கும்பலக்னம். கும்பலக்னமே மோசம் என்கிருர்களே ஸார்."

"யார் சொன்னது? அதெல்லாம் வெறும் பேச்சு. ஸர் டி. முத்துஸாமி ஐயர், ஸர். பி. ராஜகோபாலாசாரியார், சிவாஜி மஹாராஜா, லாயிட் ஜார்ஜ் எல்லோரும் கும்பலக்னம் தான்."

"பேஷ், பேஷ். பெரிய கோஷ்டியிலே என்னேச் சேர்த்துவிட்டீர்களே. ஜாதகம் கூட மூக்கண்ணுடிப் பெட்டியிலே இருந்தாப்போல ஞாபகம் ஸார். பார்க்கிறேன். பலே, இன்னிக்கு நல்ல காலம்தான். நல்ல வேளேயாய் இதோ என் ஜாதகமே இருக்கு."

"ஒகோ ஜாதகத்தைக் கையிலேயே கொண்டுவந்து விட்டீர்களா!"

"பார்த்தீர்களா, கும்பலக்னம்—நீங்கள் தான் என்னே ஸர் டி. முத்துஸாமி ஐயரோடு சேர்த்து விட்டீர்கள்."

"நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லேயே!"

"இருக்கட்டும். நமக்கு ஏதோ அதிருஷ்டம் இருக்கும்போல் இருக்கு. பால்யத்திலேயே ஒரு ஜோஸ்யன் சொன்னுன் ஸார்."

"என்ன, உங்களுக்கு ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் உத்தியோகம் ஆகுமென்று சொன்னுனு?"

"அவன் சொன்னது கிடக்கட்டும். நீங்க பாருங்கோ ஸார். இந்த குரு, ஏழில் இருந்தால் தேவலேயா? எட்டிலிருந்தால் தேவலேயா?"

"இதென்ன கேள்வி ஐயா, எங்கே தேவலாம் என்று தோன்றுகிறதோ, அங்கே மாத்திப் போட்டுக்கொள்ளலாம் என்ற உத்தேசமோ?"

"இல்லே, ஒரு பஞ்சாங்கத்தில் ஏழில் இருக்கு. ஒரு பஞ்சாங்கத்தில் எட்டில் இருக்கு."

"திருக்கணிதப்படி எங்கேயிருக்கு?"

"கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கம் தானே?"

"ஆமாம்."

"அதன்படி ஏழில் இருக்கு."

"தனலாபாதிபதி ஏழில் இல்லாவிட்டால் நீர் மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிப்பதெப்படி?"

"இது என்ன சம்பாத்தியம் ஸார்? அதிருஷ்டம் மட்டும் இருந்தால், இன்றைக்கு நான் ஆயிரரூபாய் ஸம்பாதிக்கணும் ஸார். அது போகட்டும், ஜாதகம் எப்படி யிருக்கு? இப்போ ஓரிடத்தில் முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேன். ஒரு சான்ஸ் கிடைக்குமோ, கொஞ்சம் பாருங்கோ ஸார். இப்போ, ஏதோ அஷ்டமத்துசனி என்கிறார்களே—அது ஏதாவது இடைஞ்சல் பண்ணுமோ?"

"சனிதான் உங்களுக்கு லக்னாதிபதி, அதாவது நீங்களே சனீஸ்வரூபம். உங்களைச் சனி என்ன பண்ணக் கிடக்கு?"

"இருக்கட்டும் ஸார். பரிகாஸம் பண்றேளே, ஏதாவது இருந்தா சொல்லுங்கோ ஸார். சாந்தி, கீந்தி பண்ணணும்னாலும் பண்ணித் தொலைச்சுடுவோம். இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கையும் கிடையாது. உங்களிடத்தில் சொல்றத்துக்கு என்ன? நான் ஸந்தியாவந்தனம்கூட பண்றது கிடையாது."

"இதென்ன புதிதாகச் சொல்றீர்களே? அதுதான் ரொம்பப் பேர் பண்றது கிடையாதே!"

"பண்ணப்படாது என்பதில்லே ஸார். எங்கே டைம் இருக்கு! இந்த எழவு உத்யோகத்திலே — பாருங்கோ.......... ஆமாம், ஆமாம் அதைத் தள்ளுங்கோ ஸார். ஏதோ பொழுதுபோகாதவாளுக்குப் பழைய காலத்திலே வச்சிருந்தா. நமக்குத்தான் இப்போ வேலே மென்னியைப் பிடிக்கிறதே. மேலும் ஸார், உள்ளத்தைச் சொல்றேன்—இந்த காலத்திலே ஸந்தியாவந்தனம் மண்ணாங்கட்டி ஏதாவது செய்கிறதாய் இருந்தால்கூட வெட்கமாயிருக்கு ஸார். நிஜமாச் சொல்றேன்."

"கண்டிப்பாய் இருக்கும். ஏன் இருக்காது? எனக்குத் தெரியுமே."

"அதிருக்கட்டும் ஸார் எங்கெங்கேயோ போய்விட்டது பேச்சு. சிநேகிதாள் சம்பாஷணையே இப்படித்தான். இப்ப இந்த சுக்கிரன் பன்னிரண்டில் இருக்கானே..."

"ஆமாம்."

"அதினாலே?"

"அதினாலே என்ன! அவன் அப்படித்தான் இருக்கான். விருச்சிகத்திலிருந்து சனி அவனைப் பார்க்கிறான். துலாத்திலிருந்து அங்காரகனும் அவனைப் பார்க்கிறான். நட்சத்திரம் கேட்டை. புததிசை நாலுவருஷம் பாக்கி. பதினாறு வயது வரை கேது திசை. பிற்பாடு சுக்கிரதிசை. சுக்கிர திசையில் பேர்வழி சாமான்யமில்லே."

"என்ன, என்ன?"

"என்னவாவது, ஆசாமி ரொம்ப விளையாடியிருக்கீர்."

"என்ன, என்ன?"

"என்னவாவது மறுபடியும்? நன்றாய் லேபை எஞ்சாய் பண்ணியிருக்கிறீர். சக்க போடாக்கும். நீர் வேண்டுமானால் இல்லே என்று சொல்லிப்பாருமே. குஷிதான்."

"அதெல்லா மிருக்கட்டும் ஸார். பரிஹாஸம் பண்ணாதியும்—உத்யோக விஷயத்தை பாருங்கோ ஸார்.— உங்கள் ஜோஸ்யம் ஜோஸ்யம்தான் ஸார். நான் அப்பவே கேள்விப்பட்டேன்."

"ஆமாம், அந்த லேபில் கொஞ்சம் ஒவ்வொரு இடங்களிலே சிண்டு அகப்பட்டுக்கொண்டு சில தகறார்கள், வியவகாரங்கள், அபக்யாதி, சில சிலவு ஐட்டங்கள் கூட..."

"ஏன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகூட, போங்களேன்—அந்த இழவை ஏன் சொல்லச் சொல்லுகிறீர்? இதெல்லாம் இருக்கட்டும் ஸார். இப்ப சூரியதிசை— சூரியன் எப்படி—சூரியன் லாபத்தில்—பத்தில் சனி சந்திரயோகம்."

"ஒரு 'விடோ' மூலமாய் உங்களுக்கு ஏராளமான தனப்ராப்தி."

"அப்படிக் கிடைத்தால்தான் தேவலையே ஸார்—இந்த உத்தியோகத்தைக் கூட ரிஸைன் பண்ணிவிட்டு போய்விட

லாமே. அப்படி ஏதாவது நடக்குமா சொல்லுங்கோ. நீங்கள் சொன்னால் அதைப்பற்றி தாராளமாய் பிரயத்தனம் செய்கிறேன்.”

“ஆனால் அப்படி ஏதாவது உத்தேசமிருக்கா என்ன? நான் ஏதோ வாயில் வந்ததைச் சொல்லிவைத்தேன்.”

“தெரியும் ஸார், தெரியும். என் ஸார் ஒன்னும் தெரியாதின்னா மறைக்கிறீர். உம்ம கணக்குத்தான் சரியாக யிருக்கிறதே. இப்ப நீங்க சொல்லுங்கள் ஸார். அந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிண்டா எனக்கு உத்யோகமேவேண்டாம் ஸார். அவள் அப்பா ரொம்பச் செல்லமாய் வளத்து—அதையேன் சொல்லச் சொல்றேள்? ரொம்ப கண்றாவி ஸார். அந்தப்பெண் ஸ்கூல் பைனல் வாசித்திருக்கு. என்னிடத்திலே...ரொம்ப.... இருக்கட்டும், நடக்குமா சொல்லுங்கள்.”

“என்ன ஸார்? வலையை ஏற்கனவே வீசிவிட்டீர்கள்போலும். என்னை என்ன கேள்வி? சரிதான் போய்வாரும். இது தானா உத்தியோகப்ரச்னை? ஆமாம் மூத்த ஸம்ஸாரம் இருக்காளே. பயல்கூட இருக்காப் போலேயிருக்கே. இது எப்படி ஐயா சாத்தியமாகும்? முதல் சம்சாரத்தை என்ன செய்வதாய் உத்தேசம்?”

“என் ஜாதகத்தில் இரண்டு ஸம்ஸாரத்திற்குகூட இடம் இல்லையோ?—பின்னே ‘விடோ’ மூலம் ஏராளமான தனப்ராப்தி என்றீர்களே. என்ன ஐயா? உம் ஜோஸ்யத்தை நீரே மறந்துவிட்டீரே.”

“ஆமாம். ஜாதகத்திலே அப்படித்தான் இருக்கு.”

“வரேன் ஸார், ரொம்ப வந்தனம்.”

“நடக்கட்டும். ஆனால் அதற்குள்—‘பைகமி பில்’லும் ‘டைவர்ஸ் பில்’லும் வராமல் இருக்கவேண்டும்.”

## மாயா மசீந்திரா

மெட்ரா பாலிட்டன் டாக்கீஸாரது படமான மாயா மசீந்திரா விரைவில் வெளிவரப் போகிறது. முன்பு வெளிவந்த தக்ஷயக்ஞத்தைக் காட்டிலும் கதையிலும், படப் பிடிப்பிலும் மிகவும் நன்றாயிருக்குமென்று கூறப்படுகிறது. ஸ்ரீ. பி. எல். கெம்காவின் மேல் பார்வையிலும் ராஜா சந்திர சேகரின் டைரக்ஷனிலும் படம் பிடிக்கப்பட்டு இருப்பதால், மாயா மசீந்திரா ஒரு நல்ல தமிழ் படமா யிருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

மசீந்திர நாத் கதையே ஸினிமாவுக்கு மிகவும் பொருத்தமானதுதான். கடவுள் பக்தியால் எல்லாக் கஷ்டங்களையும் வென்று விடலாமென்பதை, இக்கதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. மனிதனுக்கு இரண்டு விதமான குணங்கள் உண்டென்பதையும் உலக வாழ்வை வெறுத்து ஆசையைக் களைந்தால்தான் சாந்தி யடையலாம் என்றும் அறிகிறோம்.

பிரசித்தி பெற்ற பல நடிகர்கள் படத்தில் நடித்திருக்கிறார்கள். எம். கே. ராதா மிகவும் நன்றாக நடித்திருப்பதாக அறிகிறோம். ஹாஸ்ய நடிப்பில் பிரசித்திபெற்ற என். எஸ். கிருஷ்ணனும் இப்படத்தில் நடித்திருக்கிறார்.

சென்னை வெல்லிங்டன் டாக்கீஸில் சீக்கிரம் வெளிவரும் என்று தெரிகிறது.

# காதல் நிலை

(ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்)

மிஸஸ் நவமணி புத்தகத்தை மேஜை மேல் எறிந்து விட்டு ஜன்னல் பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பினாள். அவள் விட்ட ஆழ்ந்த பெருமூச்சி லிருந்தும் முகத்திலிருந்த ஏக்கத்திலிருந்தும் அவள் ஏதோ உள்ளக் கிளர்ச்சி கொண்டிருந்தாள் என்பது தெரிந்தது.

ஷேக்ஸ்பியரின் நாடகம் ஆன்டோனியும் கிளியோபாட்ராவும் என்பதை அப்பொழுது தான் படித்து முடித்தாள். அந்த மகத்தான காதல் நாடகத்தைப் படித்ததிலிருந்து ஏற்பட்ட மயக்கத்தில் எதிரிலிருந்த தெருவும் அதிலிருந்து போக்குவரத்தும் அவள் கண்களுக்கு ஒரு கனவுக் காட்சிபோல் தென்பட்டன. அப்பொழுது ஏற்றப்பட்ட மின்சார விளக்குகள்கூட நட்சத்திர ஜ்வாலை கொண்டிருந்தன. சரித்திரத்திலும் இலக்கியத்திலும் பிறந்து காலத்தின் வெளியில் நடமாடும் காதல் உருவங்கள் அப்பொழுது அந்தத் தெருவிலே அவள் முன்னே வரிசையாக நடந்து செல்லுவது போலிருந்தது.

அவள் அப்படி தன்னையே மறந்து உட்கார்ந்து போயிருந்ததைக் கண்டார். வாழ்க்கைக் கரையில் வந்து மோதி மறையும் ஆசை அலைகள்போல அவளுடைய பெருமூச்சுகள் கிளம்பி கிளம்பி நசித்தன. தன் முன்னே சென்ற அந்த மின்னல் காட்சியைக் கண்டதால் நிலைகுத்தியதுபோல இருந்தது அவள் பார்வை.

விளக்குகூடப் போடாமல் அந்த அறையின் அரை இருளில் அவர்கள் மேஜையின் இரு பக்கங்களிலும் உட்கார்ந்திருந்தார்கள். சடக்கென்று விளக்கைப் போட்டு அவளைத் திடுக்கிடச் செய்யக் கூடாதென்று ஆசிரியர் சுந்தரம் நாசூக்காக "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று மெதுவாகக் கேட்டார்—வெகுநேரம் அப்படிப் பேச்சற்று இருட்டில் உட்கார்ந்திருப்பதின் அவதியை நீக்குவதற்குச் சூசனையாக.

மிஸஸ் நவமணி அப்படியும் திடுக்கிட்டுத்தான் போனாள். ஒரு அன்னியரின் முன்பு அவ்வளவு மெய்ம்மறதியாக உட்கார்ந்திருந்ததை அப்பொழுதுதான் அறிந்தாள்; வெட்கத்தால் முகம் சிவந்தது. ஆனால் தூய உணர்ச்சிகள் அவள் மனதில் பொங்கிய அந்த வேளையில் அவள் தன் எண்ணங்களை ஒளிக்க இஷ்டப்படவில்லை—முயலவும் இல்லை.

"இந்த அதிசயமான காதலின் முடிவைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன்" என்று உடனே உள்ளதைச் சொல்லிவிட்டாள்.

"எந்தக் காதல்?" என்று சுந்தரம் கேட்டார்.

"கிளியோபாட்ராவின் காதல்தான்" என்று மெல் சிலர்ப்புடன் சொன்னாள்.

"கிளியோபாட்ராவின் ஆத்மாபிமானம் என்று சொல்லுங்கள்" என்று நவமணியை திருத்துபவர்போலக் கூறினார் சுந்தரம்.

"ஏன்?" என்று அவர் அந்த சந்தர்ப்பத்தில் கேலியாகப் பேசுவதை ரசிக்காதவள் போலக் கொஞ்சம் மனஸ்தாபத்துடன் கேட்டாள்.

"பிறரைவிட— அன்டொனியை விடத் தன்னைத்தான் அவள் அதிகமாகக் காதலித்தாள்."

சுந்தரம் அந்தமாதிரி சொல்லுவதைக் கேட்டு மிஸஸ் நவமணி ஆச்சரியமடைந்து போனாள் என்பது அவளுடைய முகக் குறியிலிருந்தே நன்றாகத் தெரிந்தது.

"நீங்களா அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவள் அன்டொனிக்காகத் தன் உயிரை விடவில்லையா? அதே அவளுடைய அபரிமிதமான காதலுக்கு அத்தாட்சி அல்லவா?"

"அவளுக்குக் கல்பனை உண்டு, எதை எப்படிச் செய்யவேண்டுமென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். சரியான காலத்திலும் செய்யத் தெரியும். திரிபுவன வீரர்களைத் தன் காலடியில் கிடக்கச்செய்ய வேண்டுமென்பது ஒன்றுதான் அவள் ஆசை. அவள் தன் ஆத்ம சிம்மாசனத்தில் தனியாக உட்கார்ந்துகொண்டு வேடிக்கைதான்

பார்த்தாள். சரித்திரத்திலேயே அந்த மாதிரி ஒரு சித்திரத்தை வரைந்துவிட வேண்டுமென்பது அவளுடைய நோக்கம். அதற்காக அவள் தன் வலையை வீசி வல்லரசர்களை வீழ்த்தினுள். தன் ஆத்மாபிமானத்திற்கு அவர்களைப் பலி கொடுத்தாள். அவமானமின்றி இனிமேல் உயிர் வாழ முடியாது என்று கண்டதும் உலகத்தின் முன் சட்டென்று தன்னையே ஹத்தி செய்துகொண்டாள். ஷேக்ஸ்பியர் இந்த மனோபாவத்தை விசித்திர சக்தியுடன் வர்ணித்திருக்கிறுர். இது காதலா?''

சுந்தரத்தின் பிரசங்கம் ஸ்ரீமதி நவமணியைக் குழப்பிவிட்டது. அவர் சொன்னது சரிபோலத் தோன்றலாயிற்று. ஆனுலும் தன் மனத்திலேற்பட்ட அழகிய சித்திரத்தை அழிக்க அவளுக்கு மனது வரவில்லை.

"பெண்ணின் ஹிருதயத்தில்—அவள் காதலில்—உங்களுக்கென்ன அவ்வளவு அவநம்பிக்கை?'' என்று புன்சிரிப்புடன் கேட்டாள்.

"அப்படி ஒன்று இருந்தால் அல்லவா நம்பிக்கை, அவநம்பிக்கை என்ற பேச்சே?''

மிஸஸ் ரோஸ் நவமணி எம். ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தாள். புரோபஸர் சுந்தரம் அவளுக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்து நான்கு மாதங்கள் ஆகி இருந்தன. ரெவரெண்டு வில்லியம்ஸ் என்பவர் மூலமாகத்தான் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. சுந்தரம் இலக்கியம் கற்பிக்கும் முறையிலேயே ஒரு புதுமை இருந்தது.

"ஷேக்ஸ்பியர் நிபுணன் என்பது பெயர் பெற்ற நீங்களே அவருடைய பிரதம கதாநாயகி ஒருவளை இப்படி இழந்து கூறுகிறீர்களே?''

"நான் ஷேக்ஸ்பியரின் கருத்துகளை அறிந்தமட்டில் நான் சொன்னது தான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. தனது சிருஷ்டி சக்தியின் பரிபூரண தசையிலல்லவா அவர் இந்த நாடகத்தை எழுதினுர். ஆகையால் அவர் தன் கருத்தைச் செவ்வனே வெளியிட்டிருக்கிறுர். சரித்திரப்படி அவளுக்கு இருந்த குணத்தை கூடுதல் குறைவின்றி பெண்மையைப் பூரணமாக வெளியிட்டுக் காட்டி எழுதியிருக்கிறுர்.''

"அந்தப் பெண்மை தான் என்ன சொல்லுங்களேன்!'' என்று சட்டென்று குறுக்கிட்டுக் கேட்டாள்.

"அது ஒன்றும் என்னுடைய இலக்கியக் கொள்கை மட்டுமல்ல. அதுதான் அனுபவ சித்தமானது.''

"எது?''

"காதல் என்பது ஒரு கதை என்பது.''

சுந்தரம் தன்னையே தாக்கினது போலத் துடித்தாள் நவமணி.

"ஏதோவொரு சில இடங்களில் வேண்டுமானுல் காதல் வியர்த்தாகப் போயிருக்கலாம். அதற்காக ஸ்திரீ புருஷ ஸ்வபாவத்திற்கே மூலாதாரமான ஒரு உணர்ச்சியை இல்லையென்பது சரியா அல்லது நியாயமா?'' என்று ஸ்ரீமதி நவமணி ஊக்கத்துடன் கேட்டாள்.

"அம்மா, நான் அறிந்ததை—உணர்ந்ததை—மட்டும் சொல்லுகிறேன். காதல் என்னும் கொள்கை ஒரு அழகிய கனவு—லட்சியம். கவிகள் அதைப்பற்றி வானளாவப் பாடலாம். ஆனுல் அவ்வளவு உயர்தர உணர்ச்சிக்கு வாழ்க்கையில் இடமில்லை. டால்ஸ்டாய் என்ற மகான்கூட அந்தமாதிரிதான் அபிப்பிராயப்படுகிறுர். ஆனுல்—என்னை மன்னியுங்கள்—உங்கள் சொந்த அனுபவம் வேறுவிதமாக இருக்கலாம்—அதை மறந்து விட்டேன்.''

உண்மையிலேயே இருவரும் தங்களை மறந்துவிட்டார்கள். அறையில் இருள் நன்றுகச் சூழ்ந்துவிட்டது. ஜன்னல் வழியாக ஒரு சிறு நிலாத்துண்டு மட்டும் அறைக்குள் விழுந்துகிடந்தது. ஸ்ரீமதி நவமணி உள்ளம் உருகிவிட்டாள்.

"நாம் இருவரும் இன்றிரவு இவ்வளவு தூரம் பேசியபிறகு நான் உங்களிடம் ஒரு பொய்யைச் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் இந்த நான்கு மாதங்களில் எனக்கு ஒரு நிரந்தரமான நண்பர் ஆகிவிட்டீர்கள். உங்களிடம் சொல்லிவிடுகிறேன். என் வாழ்க்கை ரகசியத்தை—என் மண வாழ்க்கை—வெறும் சாவு நிலைக்குச் சமானம் தான்'' என்று சொல்லும்பொழுது அவளுடைய குரலில் கண்ணீர் ததும்பிற்று.

"அம்மா! நீங்கள் அந்த மாதிரி நினைப்பதற்குக் காரணம் என்னவென்றால் நீங்கள் வாழ்க்கையிலிருந்து அதிகம் எதிர் பார்த்ததால் தான்—அந்த மண வாழ்க்கையிலிருந்து. அதில் நீங்கள் காதலை எதிர் பார்க்கக்கூடாது" என்று சுந்தரம் உணர்ச்சியுடன் பேச ஆரம்பித்தார்.

"பின் கலியாணமே செய்து கொள்வானேன்?"

"நான் என்ன சொல்லட்டும்? நான் இதுமட்டும் சொல்லக்கூடும். கலியாணம் ஆகிற நிமிஷம் காதல் முடிவடைகிறது." ஆனால் காதலை நிலைநிறுத்த முயலுபவர்கள் கூடச் சரண்புகுந்துதான் அப்படிச் செய்யமுடியும். ரோமியோவும் ஜூலியத்தும் அப்படித்தான் செய்தார்கள். பார் பிரியாவும் அவள் காதலனும் அப்படித்தான் செய்தார்கள். அதி அற்புதமான உயர்தரக் காதல் எங்கும் அந்தமாதிரி தான் இருந்திருக்கிறது."

"புருஷனும் பெண்ணும் ஒரு மனப்பட்டால் காதல் ஏன் வளராது?"

"ஒரு மனப் படுவதென்பது என்ன? இரண்டு மனங்கள் ஒன்றுவது தானே? ஒன்று மற்றொன்றில் லயப்படுவதுதானே? ஒரு ஸ்வாபம் மற்றொன்றிற்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிவதுதானே—"

"அதாவது சிறு தன்மை பெரிதிற்கு இடங் கொடுத்து அதில் ஈடுபட்டு விடுவதுதான்."

"அதை யார் தீர்மானிப்பது? ஆராய்ந்து பார்த்தால் சிறிதும் பெரிதும் என்ன? அபிப்பிராய பேதமாகத்தானே கடைசியில் முடிகிறது?"

"நீங்கள் உங்கள் வாழ்க்கையில் காதலைக் கண்டிருக்கிறீர்களோ?—நான் கேட்கலாமா?" என்று அவள் அவரைத் திடீரென்று கேட்டாள்.

இந்த எதிர் பாராத கேள்வி அவரைக் கொஞ்சம் தூக்கி வாரிப் போட்டு விட்டது.

"உண்டு—அதாவது—அதைப் பற்றிச் சொல்லி என்ன பயன்?" என்று வார்த்தைகளை விழுங்கினார்.

"நீங்கள் என்னிடம் சொல்லக் கூடுமா அதைப் பற்றி?" என்று அவள் மறுபடியும் கேட்டாள்.

"ஆகா—அதற்கென்ன ஆட்சேபனை ஆனால்—அது—" என்று சுந்தரம் இழுத்து இழுத்து தன் முகத்தைப் பார்த்து அசடு தட்டுவதைக் கண்டதும் நவமணிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவர் முகத்தில் "தெரியவில்லையா உனக்கு?" என்று எழுதியிருந்தது.

அவள் வெட்கத்தால் சிலிர்த்துப் போனாள். முகம் வெளுத்தது.

"ஆமாம். எப்பொழுது முதல் இந்த மாதிரி உங்கள் மனது?" என்று அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டாள்.

"நான் இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த நிமிஷம் முதல்."

"ஓ, கண்டதும் காதலோ!" என்று நவமணி சிரிக்க முயன்றாள்.

"என்னைக் கேலி செய்யக்கூடாது."

"ஆனால் உங்களுக்குத்தான் காதலில் நம்பிக்கை கிடையாதே?"

"காதலில் நம்பிக்கை இல்லை என்பதல்ல. அது வாழ்க்கையில் இருக்க முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம், அவ்வளவுதான்."

"பின் ஏன் இவ்வளவு நாளும் வாயை மூடிக்கொண்டு இருந்தீர்கள்?"

"அதனால்தான்! என் நாக்கின் நுனியில் வந்து வந்து வெளியேறத் துடித்த அந்த ஒரு வார்த்தையை அதற்காகத்தான் வெளியே விடாமல் தடுத்து வைத்திருக்கிறேன்."

"என் மனதை அறிய விரும்பினீர்களோ?"

"இல்லை, இல்லை, அதற்கென்ன அவசியம் இருந்தது?"

"ஓகோ, நான் அவ்வளவு வெகுளியாக நடந்து கொண்டு விட்டேனா?" என்று சிரித்துக் கொண்டு கேட்டாள். பிறகு திடீரென்று குரலை மாற்றிக்கொண்டு துடிதுடிப்புடன் "நாம் இருவரும் ஒரு முயற்சி செய்தால் என்ன?"

தான் சொல்லி விட்டது என்ன என்பதை உணர்ந்ததும் வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

"ரோஸ், இல்லை. காதல் என்பது இப்பொழுது இருப்பதுதான். இதற்குமேல் போகக்கூடாது. ஒரு அடிகூட இதற்கு மேல் எடுத்து வைக்கக் கூடாது. காதல்

கரையற்றது, கட்டற்றது என்பது மட்டுமல்ல. வார்த்தையிலோ, செயலிலோ அதற்கொரு கரை ஏற்படக்கூடாது, நிர்ணயம் கூடாது. அது மனதில் மரணமின்றி வாழ வேண்டும். அப்பொழுது தான் ரோஸ், உன் அழகு நித்திய யௌவனமாக இருக்கும்; என் காதலும் அழியாது. மகாகவி கீட்ஸின் வாக்கு நினைவிருக்கிறதா?

"வாலிபனே, என்னாளும் நீ காதலித்துக்கொண்டிருப்பாய்; அவளும் அப்படியே அழகுருவமாக இருப்பாள்" என்று இரண்டு சிலைகளைப் பார்த்து அவர் சொன்னது தான் உண்மை.

"ஆனால் அது எங்கே இருக்கிறது, இங்கு வாழ்க்கையில் எனக்கொரு பிடிப்பு வேண்டுமே?"

"வாழ்க்கையில் பிடிப்பு வேண்டாம் ரோஸ், இப்படியே இருப்போம் போதும். அது தான் காதல் நிலை!"

---

# உதிர்ந்த மணிகள்

அதிகமாக வோட் ஒருவருக்குக் கிடைத்தால் அதனால் அதிகமான நற்குணமும் கிடைக்கும் என்று எண்ணுவது தவறு.

—டாக்டர் ஸி. ஆர். ரெட்டி.

* * *

மிகவும் வைத்திய முறைப்படி வாழ்பவர்கள் தான் மிகவும் கஷ்டத்துடன் வாழ்பவர்கள்.

—ஸ்ரீ பர்ட்டன்.

* * *

நமது பெரிய தலைவர்கள் ஒற்றுமையாக இராமல் பெரிய இலக்ஷியத்தை மறந்து சின்ன விஷயங்களில் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

—ஸ்ரீ டட் மஜூம்தார்.

* * *

ராமர் எங்கே போனாலும் அந்த இடம் அயோத்தியாவது போல், ஒரு மனிதர் உண்மையான தலைவராக இருந்தால் அவர் தலையாட்டியாக இருக்க வேண்டியதில்லை.

—ஸ்ரீ எஸ். சத்யமூர்த்தி.

* * *

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துடன் ஓர் பெரிய சண்டை போட தேசம் பக்குவம் அடையவில்லை என்று சிலர் எண்ணுவதைப் பார்க்க நான் வருந்துகிறேன்.

—ஸ்ரீ சுபாஷ் போஸ்.

* * *

தேசபக்தி வீரத்தையும் தியாகத்தையும் தூண்டுகிறது; கொலையையும் விஷமத்தையும் கூடத் தூண்டுகிறது; அதாவது தேசபக்தி சரித்திரத்திலுள்ள ஒவ்வொரு குற்றத்துக்கும் நற்செய்கைக்கும் போஷிப்பா யிருக்கிறது.

—லார்ட் ரோஸ்பரி.

* * *

மகாத்மாவின் ஆதரவு காங்கிரஸுக்கு இல்லையென்றால் யார் பிறகு என் பேரிலும் உங்கள் பேரிலும் நம்பிக்கை வைப்பார்கள்?

—ஸ்ரீ. கோவிந்த வல்லபபந்த்.

* * *

சுயேச்சையும் ஜன நாயகமும் வேண்டுமானால் நாம் பொறுப்பாகவும் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்கான நடத்தையுடனும் இருக்க வேண்டும்.

—ஸ்ரீ நேரு.

* * *

காங்கிரஸ் விஷயங்களை நான் கவனித்த போது, ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் நான் காங்கிரஸை விட்ட நாளிலிருந்து ஒரு வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று எனக்குத் தோன்றிற்று. காங்கிரஸ் மந்திரி சபைதான் காங்கிரஸில் அதிகாரம் செலுத்துகிறார்களென்றும் காங்கிரஸ் அதன் 'மந்திரி சபைகளை'த் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதென்றும், வோட் எடுக்கும்போது சுயேச்சையாக ஒருவரும் வோட் செய்ய வில்லை யென்றும், காங்கிரஸ் மந்திரி சபை செல்வாக்கை உபயோகித்து வோட்டுப் போடச் செய்ததென்றும் எனக்குத்தோன்றிற்று.

—ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார்.

## இல்லோளி

# பூர்வ கதை

பெரிய பணக்காரரான கண்டிராக்டர் **லம்போதர முதலியார்** மனைவியை இழந்தவர். தன் தாயார், பிள்ளை, மருமகள்—இவர்களுடன் வசித்து வந்தார். முதலியாரின் தாயார் **தேவானையம்மாள்** தாயற்ற குழந்தைகள் இருவரையும் அன்பாய் வளர்த்து வந்தாள். மருமகள் **புனிதவதியின்** தாயார் சிறுவயதிலேயே காலமாய் விட்டபடியால் அவளை வளர்க்கும் பொறுப்பு முதலியார் பேரில் விழுந்தது. புனிதவதியும் முதலியார் புத்திரரான தணிகைவேலனும் ஒரே வயதினர். சேர்ந்தாற்போல் காலேஜுக்குப் போவார்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாள்.

இந்த சந்தோஷமான குடும்பத்தை விட்டுவிட்டு அடுத்த வீட்டுக்கு வருவோம் அது **பாப்பாத்தியம்மாள்** வீடு. சிறு வயதில் பாப்பாவை லம்போதர முதலியாருக்குக் கொடுப்பதாயிருந்தது. ஆனால் பாப்பாவின் தாயார் மறுத்துவிட்டாள். பாப்பாவின் துரதிருஷ்டம் எங்கே போயிற்று? கடைசியில் அவள் ஓர் குடிகார ஜாகீர்தாருக்கு வாழ்க்கைப்பட்டு விதவையானாள். பாப்பாவுக்கு ஒரு பெரிய புதல்வனும் இரு சிறு குழந்தைகளும் உண்டு. **சிவக்கொழுந்து** என்பவன் அந்த மூத்த சற்புத்திரன்! அவன் போகாத சினிமாக் கொட்டகை பாக்கியில்லை! குதிரைப் பந்தயமில்லை! இதனால் பாப்பா மனம் புழுங்கினாள்.

புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாளல்லவா? ஆனால் தணிகைவேலன் தன்னைக் காதலிக்கிறானா என்பதை அவளால் அறிய முடியவில்லை. ஒரு நாள் மாலை டென்னிஸ் விளையாடிவிட்டு வந்த தணிகு தோட்டத்தில் சண்பக மரத்தடியில் தலையைக் கோதிக்கொண்டு உல்லாசமாய் உட்கார்ந்திருந்த புனிதத்தைச் சந்தித்தான். ரகஸ்யமாக ஒரு கேள்வி கேட்க விரும்பினான்.

புனிதத்தின் வகுப்புத் தோழியான சிவகாமியை தனக்கு அப்பா நிச்சயம் செய்திருக்கிறாரென்றும் அவள் எப்படிப்பட்டவளென்றும் அவன் புனிதத்தினிடமே கேட்டால் திகைப்பை உண்டாக்காமல் என்ன செய்யும்? இயந்திரம்போல் புனிதம் ஏதோ பதில் சொல்லி வைத்தாள். தணிகு போனதும், புனிதம் வருத்தம் தாங்காமல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தாள்.

அன்றிரவு புனிதவதிக்குத் தூக்கமே வரவில்லை. துக்கம் தாங்காமல் விம்மி அழுதாள். தணிகைவேலன் அவள் அறைக்கு வந்து அவளைத்தேற்றினான். காலஞ்சென்ற தாயாரின் ஞாபகம் வந்ததால் புனிதம் வருந்துகிறாள் என்று எல்லோரும் நம்பினார்கள். உண்மையான காரணம் புனிதத்தைத் தவிர வேறு யாருக்காவது தெரியுமா? ஆம்; அதனுடைய சாயை தணிகைவேலன் ஹிருதயத்தில் கூடப் பிரதி பலித்தது. இல்லாவிட்டால் அவன் ஏன் படுக்கையில் படுத்துக்கொண்டு தூக்கம் வராமல் வேதனைப்பட வேண்டும்.?

புனிதம் அன்றிரவு தற்கொலை செய்துகொள்வதென்று தீர்மானித்தாள். கடைசியாக அவள் முன்செய்த தீர்மானம் மெதுவாய் மறைந்தது. துயரம் வருவதெல்லாம் ஆசையால்; ஆகையால் ஆசையைக் களைந்துவிட்டால்?......என்று கேட்டுக்கொண்டாள். ஆகவே பற்றைத் துறந்த ஓர் சன்னியாசியாகக் காலம் கழிக்கத் துணிந்தாள் புனிதம்.

தணிகுவுக்கும் சிவகாமிக்கும் கலியாணம் ஆகி இரு வருஷங்கள் ஓடி மறைந்தன. புனிதம் மட்டும் கலியாணத்தை மறுத்துக் காலந்தள்ளியது தேவானையம்மாளுக்குக் கோபமாயிருந்தது.

சிவகாமிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. புனிதமும் விரக்தி வாழ்வை மேற்கொண்டாள். சிவகாமியின் குழந்தைகளுக்கு சிசுருஷை செய்து ஐந்து வருஷங்களைக் கழித்தாள்.

சிவகாமிக்கு இரட்டைக்குழந்தை பிறந்தது. அவள் மிகவும் இளைத்து மெலிந்து படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தாள். புனிதம் துக்கத்துடன் அவளருகில் உட்கார்ந்துகொண்டு அவளுக்குப் பால் கொடுத்தாள். சிவகாமியின் தேகநிலையையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் நினைத்துக்கொண்டதும் புனிதத்துக்கு அழுகை வந்தது.




"அக்கா! அக்கா! ஏன் அழுகிறீர்கள்" என்று கேட்டுவிட்டாள் சிவகாமி. சற்று நேரம் நிசப்தம். மிகவும் மெல்லிய பல ஹீனமான குரலில் "அக்கா! நான் பிழைக்கமாட்டேனே? நான் ஒன்றுக்கும் பயப்படவில்லை" என்று கெஞ்சிக்கேட்டாள் சிவகாமி.

"சரிதான் தாறுமாறாய் உளறாதே. உனக்கொன்றும் பயமில்லை" என்றாள் புனிதம்.

"அக்கா! நான் கேட்கிறேனே என்று கோபிக்காதேயுங்கள். எனக்குச் சாவைப் பற்றிப் பயமில்லை. ஆனால்...ஆனால் அவரை விட்டுவிட்டு இறந்துபோகத்தான் மனமில்லை. ஒருவேளை நான் இறந்தாலும் என் குழந்தைகளை மாற்றாந்தாயின் கொடுமைகளுக்கு ஆளாக்காமல் நீங்களே கவனித்துக் கொள்ளுவீர்களா? இதுவரையில் நானே கவனித்து வந்தேன் என்றாலும் ஒருவேளை உங்கள் கணவர் உங்களைக் குழந்தைகளிடமிருந்து பிரிக்கலாம். அல்லது என் குழந்தைகளுக்கு சிச்ருஷை செய்வது அவருக்குப் பிடிக்காமலிருந்தாலுமிருக்கலாம்.......... தவிர அவரை இந்த விஷயத்தில் நம்பமுடியாது. தாயில்லாத் தகப்பன் தாயாதி என்பது உலக வழக்கு. நம்பினால் உங்களைத்தான் நம்ப வேண்டும்" என்று சொல்லுகையில்...... குரல் தழதழத்தது. கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி ஓடிற்று.

"அடி சிவகாமி, இதென்ன குருட்டு யோசனை? சற்று நிம்மதியாய்த் தூங்கினால்தான் உடம்பு சுகமாகும். தூங்கு!" என்றாள்.

சிவகாமி அவள் கையைப் பிடித்த பிடியை விடவேயில்லை. ஏதோ ஒரு காந்த சக்தி உடலில் ஊடுருவுவது போல் தோன்றிற்று. புனிதம் மெதுவாய் அவள் கையை எடுக்க அவள் கைகளும் உதடுகளும் கண்ணிமைகூட படபட வென்று நடுங்குவதைக் கண்டாள்.

அதே சமயத்தில் டாக்டரும் தணிகைவேலனும் உள்ளே நுழைந்தார்கள்.

* * *

"அறியாப்பெண். பிள்ளைத்தாய்ச்சி. பீச்சுக்கும் கீச்சுக்கும் போகவேண்டாமென்றால் கேட்டீர்களா? இது இரத்தக் காட்டேரிதான். அதுதான் ஒரே மட்டாய் இரத்தத்தையே குடித்துவிட்டது. பச்சைப்பிள்ளைக்காரிகளுக் கெல்லாம் நாட்டு மருந்துதான் இடுப்புக்கு வலுவு. இந்தப் பாலும் பச்சைத்தண்ணீரும் நிலத்தண்ணீரும் வேண்டாம். ஏதாவது நல்ல லேகியம் கியாழம் ஏதாவது கொடுங்கள் என்று முட்டிக்கொண்டேனே. கேட்டீர்களா? தாண்டவராயப் பிள்ளை நல்ல கைராசிக்காரன். எப்பேர்ப்பட்ட இரத்த சோகை எல்லாம் ஆட்டுப்பாலில் மூன்றுவேளை மருந்து கொடுத்துக் குணப்படுத்தி விடுவான். அதெல்லாம் இவர்கள் சட்டைசெய்வார்களா? என்னம்மணி! தாயே! முண்டக்கண்ணியம்மா! ஏழுமலையானே! நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று ஒவ்வொரு தெய்வங்களாகவே வேண்டிக் கொண்டிருந்தாள் தேவானையம்மாள்.

தணிகைவேலன் அவள் அருகில் உட்கார்ந்திருந்தான். புனிதம் மறுபுறம் உட்காருவதும் எழுவதுமாயிருந்தாள். டாக்டர் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி எச்சரித்தார். ஒரு ஸ்பெஷல் நர்ஸ் ஏற்படுத்தப்பட்டாள்.

* * *

இரவு மணி ஏழு, சிவகாமி படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தாள். தணிகை

வேலன் ஒரே கற்சிலையாய் நின்று கொண்டிருந்தான். புனிதம் பித்துப் பிடித்தவள் போல் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தாள். முதலியார் உள்ளுக்கும் வாயிலுக்குமாய் நடந்து கொண்டிருந்தார். சம்பந்த முதலியார் கண்கள் கோவைப்பழம் போற் சிவந்திருந்தன. அசையாமல் ஒரு நாற்காலியில் சாய்ந்து கிடந்தார்.

காய்ந்து சுருகிய மலர்போல் வற்றி வரண்டு கிடந்த சிவகாமு உடல் வேதனையைத் தாளாமல் தவிக்கலாயிற்று. அப்பா! அம்மா!வென்று அவள் முனகிய குரல் அந்த நிசப்தமான இரவில் எல்லோருள்ளத்தையும் ஒருங்கே கலக்கிற்று. மருள, மருள அவள் விழித்த விழி நிரம்பவும் பயங்கரமாய், இன்னதென்று விவரிக்க இயலாத பேரச்சத்தை உண்டுபண்ணிற்று.

பன்னிரண்டு மணி தாண்டி விட்டால் ஒரு பயமுமில்லை. ஜன்ம நட்சத்திரம்; அமாவாசை; பாதி இரவு கழிந்துவிட்டால் பயமில்லை என்றார் தண்டரை சோதிடர். டாக்டர் தாதுவைப் பார்த்துவிட்டு மறுபடி "இஞ்செக்ஷன்" செய்தார்.

நடு நிசி. சீறு சீறென்று புயற்காற்று வீசிற்று. தூரத்திலிருந்த சவுக்குத் தோப்பிலிருந்து 'ஓ' என்ற பயங்கர சப்தம் எழுந்தது. சரியாய்ப் பன்னிரண்டு மணி. சிவகாமி தலையைப் புரட்டத் தொடங்கினாள். 'அக்கா!' என்ற சொல் மிகுந்த சிரமத்துடன் நாவசையாமல் அவள் வாயினின்றும் வெளி வந்தன. அதை யொட்டி ஏதோ இன்னதென்று விளங்காத சில வார்த்தைகள் உருத்தெரியாமல் சிதைந்து மெல்லிய சப்தமாய் எழுந்தன. தணிகுவும் சம்பந்த முதலியாரும் "என்ன சிவகாமு! வாயைத் திறந்து பேசு. என்னம்மா பண்ணுகிறது?" என்று பதறினார்கள். ஆனால்... ஆம். சிவகாமு கண்களை மூடினாள். பிறகு திறக்கவில்லை.

## 9

## புரட்சி

பங்குனி மாதம் வெயில் வெகு கடுமையாய்க் காய்ந்து கொண்டிருந்தது. திண்ணையை அடுத்து நடை ஓரத்திலுட்கார்ந்த படியே தேவானையம்மாள் பத்துப் பதினைந்து கொட்டங்கச்சிகளையும், கிளிஞ்சல்கள், தகரமூடிகள், முதலியவைகள் புடைசூழக் கொலு வீற்றிருந்தாள். அவள் நெற்றி திருநீறும் அதன்மேல் பெரிய குங்குமப் பொட்டும் அதன்மேல் சந்தனப் பொட்டுமிடப் பெற்றிருந்தது. பாவட்டம் பூப்போல் நரைத்திருந்த தலையில் பீர்க்கு, பூசணி, அந்திமாந்தாரை முதலிய மலர்களை வைத்துப் பெரியதோர் சொருக்குப் போட்டிருந்தது. அழுக்கேறி அது இன்ன நிறமென்றே சொல்ல முடியாத ஒரு சிறு கந்தையை அரையில் மட்டும் உடுத்திருந்தாள். கிளிஞ்சல்களையும் நத்தாங்கூடுகளையும் கட்டிய ஒரு மாலையை கழுத்தில் அணிந்து கொண்டிருந்தாள்.

ஓயாமல் சிரிப்பதும் பாடுவதுமாகவே இருந்த அவள் இடையில் எழுந்து ஒரு சொம்பைத் தூக்கிக்கொண்டு, "அங்காளம்மா வாடி, கங்காளம்மா வாடி" என்று புலம்பியவளாய், சொம்பைத் தாளம் போடுவது போல் தட்டிக் கொண்டிருந்தாள்.

"பாட்டீ! வா, வா!" என்று மிகுந்த அதிகாரத்துடன் கூறியவண்ணம் ஒரு சிறு குழந்தை அவள் கையிலிருந்த சொம்பைப்பற்றி இழுத்துப் போக ஆரம்பித்தது.

"என் கண்ணே, வாரேண்டா. நீ எப்படிச் சொன்னாலும் அப்படிக் கேட்கிறேன். வர வேண்டுமா, வருகிறேன். போகவேண்டுமா, போகிறேன். நீ சொன்னபடி நான் செய்கிறேன். நீ சொன்னால் நான் கேட்க வேண்டியதுதானே" என்று பயந்து ஒடுங்கிய வண்ணம் அந்தக் குழந்தை இழுத்த விடமெல்லாம் சுற்றிச் சுற்றி நடக்கலானாள்.

கூடத்திலிருந்த சிங்காரவேலு முதலியாரின் மனைவி புனிதத்திடம் "ஐயோ குழந்தையை ஏதாவது செய்து விடப் போகிறது" என்று கூவினாள்.

"இல்லை, இல்லை. மற்ற விஷயங்களில் எப்படி இருந்தாலும் குழந்தை விஷயத்தில் தொடமாட்டார். இப்பொழுது கொஞ்சம் தெளிந்திருக்கிறது. முன்பு கட்டிப் பிடிக்க முடியாது. இப்பொழுதுதான் எவ்வளவோ குணமாகி இருக்கிறதே" என்றாள் புனிதம்.

அச் சிறு குழந்தை தத்தித் தத்தி நடந்து அக்கிழவியை அங்கு வா இங்கு வாவென்று ஒவ்வோரிடமாய் அலைக் கழித்தது. முன்னால் அதிகாரத்துடன் அக் குழந்தை செல்ல, வெகு பயபக்தியுடன்

கைகட்டி வாய்புதைத்து தனகோடியம்மாள் நடுநடுங்கி நடந்து வருவதைக் கண்டு கலகலவென்று சிரித்து விட்டாள் புனிதம்.

"என்னடி கொழுப்பு என் ராஜாவைப் பார்த்துச் சிரிக்கிறுயா?" என்று உறுமினுள் தேவானையம்மாள்.

அச்சிறு குழந்தை தன் சுருண்ட குழல்கள் அசைய, "ஆண்டாம், ஆண்டாம்," என்பதுபோல் தலையையும் கையையும் அசைத்தது.

புனிதம் அப்படியே வாரி அணைத்துக் கொண்டாள். "என் தங்கத்திற்குக் கண்ணேறு வந்துவிடும். கொஞ்சம் கற்பூரமாவது சுற்றிப்போட வேண்டும். எங்க நண்டுக்குட்டிக்கு ஒரு பாட்டு பாடலாமா"வென்று பாடலானுள்புனிதம்.

"சின்னஞ் சிறியதோர் கெண்டி—அதை
செல்லச் சிறு கையிற் கொண்டு
கன்னங்கள் உப்பப் பால் மண்டி
என்கண்களை நோக்கிடும் நண்டு.

வண்டுகள்போலத் துலங்கும்—ஒளி
வண்ண வசிகரக் கண்முன்
பண்டம் பலகாரம் வந்தால்—மிக
பாய்ந்துவரும் எங்கள் நண்டு.

கள்ளெனும் சங்கீதங் காணில்—ஒரு
கள்ள சருப்பத்தைப் போலே
மெள்ள இருசெவி மொண்டு—இசை
அள்ளிப் பருகிடும் நண்டு.

ஆம்பல்மலர் தலைப்போலே—அலர்ந்
தாவென்று வாயைத் திறந்து
தேம்பியழுங்குரலாலே—குழல்
தேங்கிசை கொட்டும்என் நண்டு.

தேயுவெனத் தூயதாகி—தெய்வத்
தேசு நிறைந்த முகத்தில்
ஆயிரமுத் தங்கள் தந்தும்—எங்கள்
ஆசையடங்காக் கண்ணம்மா.

என்று பாடிக்கொண்டிருக்கையில், பாரதி பாடலோ என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் பாப்பாத்தியம்மாள். "இல்லை அக்கா இது வேருெருவர்."

"அது போகட்டும். பாட்டிலேகூட அவள் நண்டுதானு?"

"போங்கள் அக்கா! அவைகளில்லாவிட்டால் பாட்டிலே ருசி ஏது? அப்படிக் கூப்பிட்டால் தான் எனக்குத் திருப்தியாயிருக்கும். அதெல்லாம் கொஞ்சல் இரகசியம். அவள் புக்ககம்போனுல் கூட நண்டு என்றுதான் கூப்பிடுவேன். அவள் சிரிப்பதைப் பாருங்களேன். கன்னம், உதடு எல்லாம் ஒரே அச்சு. சிவகாமிதான். பிழைத்துக் கிடக்கட்டும் சிவகாமி வயதுக்கு எங்கள் நண்டு எப்படியிருப்பாள் தெரியுமோ?" என்றுள் புனிதம்.

* * *

மேல் மாடியில் தன் அறையிற் படுத்து ஏதோ சட்ட புஸ்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான் தணிகை வேலன். நன்ருய் இருட்டிவிட்டது. விளக்கேற்றியிருக்கிறதா இல்லையா என்பதைக் கூடக் கவனியாதவனுய், கைகளில் திறந்தபடியே புத்தகத்தை வைத்தவனுய்ச் சிந்தையில் மூழ்கியிருந்தான்.

சிவகாமியின் பேச்சும் செயல்களும் ஒவ்வொன்ருய் அவன் நினைவிற்கு வர, கண்களில் கண்ணீர் துளித்தது. அழகிய மலர் மாலைகளால் அலங்கரித்த ஒரு பெரிய புகைப்படத்தை அவன் கண்கள் நோக்கின. அவள் அப்படத்தில் நின்றிருந்த காட்சி தன்னை நோக்கி ஏன் அழவேண்டும் என்று கேட்டதுபோல் தோன்றிற்று. அவளது மாசற்ற எழில் முகம் அவன் உள்ளத்தே தோன்றித் தோன்றி மறைந்தது. சென்றுபோன நாட்களின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் அவன் மனதில் ஒன்றன்பின் ஒன்ருய்த் தோன்ற, அவ்வறையில் கோபம் வந்தால் அவள் வழக்கமாய்ப் போய் உட்காரும் பலகணியின் ஓரம் நினைவிற்கு வரவே, அப்பலகணியைத் திரும்பிப் பார்த்தான்.

அப்பலகணியில் புன்னகை தவழும் முகத்தினளாய் "ஏன் அத்தான். எங்கே கோபித்துக்கொள் பார்க்கலாம்" என்று தன்னைக் கேட்டுவிட்டு கலகலவென்று சிரிப்பதுபோல் தோன்ற, திடுக்கிட்டான் தணிகைவேலன். (தொடரும்)

பொருளாதார அனுபந்தம்

[இந்த வாரத்திலிருந்து 'பாரதமணி'யில் தொடர்ச்சியாக அனுபந்தங்கள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவ்வாரம் பொரு ளாதார அனுபந்தம் வெளியாகிறது. பிரபல ஆராய்ச்சியாளர்களும், எழுத்தாளர் களும் நமது அனுபந்தங்களை அலங்கரிப்பார்கள்.]

# நமது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள்

(ஒரு நிருபர்)

சென்ற சில வருஷங்களாக இந்தியாவி லுள்ள சுதேசி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி களின் தொகை வளர்ந்து வருகிறது. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் வளர்ச்சி யும் முன்னேற்றமும் தேசத்தின் பொரு ளாதாரத்திற்கு மிகவும் உதவி செய்யும் என்பதை பல பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். இதை அறிந்து பொது ஜனங்களும் மனமுவந்து இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை ஆத ரிக்க முன் வந்துள்ளனர். இந்திய சர்க் கார் சமீபத்தில் வெளியிட்ட இந்திய இன்ஷ்யூரன்ஸ் பிரசுரத்தைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். இந்தியக் கம்பெனிகளின் 'பாலிஸி சராசரி' அதிக மில்லாவிட்டால் கூட அதிகப்படியான நபர்கள் பாலிஸிதாரர்களாகச் சேர்ந்திருக் கிறார்கள். 'பாலிஸி சராசரி' குறைவாக இருப்பதற்குக் காரணம் குறைந்த பெறு மானமுள்ள பாலிஸிகளை நம்மவர்கள் எடுத்துக்கொள்வது தான். இதற்குக் காரணம் நம்மவர்கள் சாதாரண வருமா னம் உள்ளவர்களாக இருப்பது தான். உதாரணமாக, 40 ரூபாய் சம்பளமுள்ள குமாஸ்தா ஒருவர் ரூ. 1000க்கு மேல் பாலிஸி எடுத்துக்கொள்ள முடியாதல்லவா?

தேச மக்களில் சிலருக்கு வெளிநாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் மேல் இருக்கும் மோகம் இன்னும் தெளியவில்லை என்பது வாஸ்தவமே. மஹாராஜாக்களும் இன்னும் உத்தியோகஸ்தர்களும் வெளி நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் பாலிஸி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பதினாயிரம், லக்ஷம்—இப்படியாக இன்ஷ் யூர் செய்கிறார்கள். அதனால் தான் வெளிநாட்டுக் கம்பெனிகள் நம் தேசத்தில் உட்கார்ந்து கொண்டு இந்தியக் கம்பெனி களைவிட அதிகமான பாலிஸி சராசரியைக் காண்பிக்க முடிகிறது. அதனால் தான் மகா ஜனங்கள் இந்தியக் கம்பெனிகளை சுதேசிய ஆர்வத்துடன் ஆதரிக்க முற்பட் டும் வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் 'சரா சரி'யில் போட்டி போட முடியவில்லை. ஆனால் இந்தியக் கம்பெனிகளின் 'புது பிஸினெஸ்' தொகையும் பங்கும் நாளடைவில் வளர்ந்து வருவது எல்லோ ருக்கும் சந்தோஷத்தை அளிக்கக்கூடிய தாகும். எப்பொழுது நமது செல்வந்தர் கள் இன்னும் அதிகமாக ஊக்கத்துடன் நமது இந்தியக் கம்பெனிகளை ஆதரிக் கிறார்களோ அப்போது தான் நமது கம் பெனிகள் வேர் பரவி பலம் அடையும்.

நமது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் எவ் வளவு பெரிய இடையூறுகளையெல்லாம் தாண்டி, தற்போதைய நிலைக்கு வந்திருக் கின்றன என்று தெரியவரும். முதலாவ தாக, பலமுள்ள அயல்நாட்டுக் கம்பெனிக ளுடன் போட்டி போடவேண்டி வந்தது. அவைகள் பல ராஜாக்களாலும் செல்வந் தர்களாலும் போஷிக்கப்பட்டது. அப் படிப்பட்ட கம்பெனிகளுடன் போட்டி போட்டு நடத்துவதென்றால் எவ்வளவு சிரமமான காரியம்?

இரண்டாவதாக, நமது இந்திய சர்க் கார் சுதேசிக் கம்பெனிகளின் அபிவிருத்தி யில் போதிய பாதுகாப்பும் உதவியும் அளிக்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமை யில் சுதேசிக் கம்பெனிகள் தலையெடுக்க வேண்டியதாயிற்று. எந்த தேசத்திலும் சுதேசிக் கம்பெனிகளைப் பாதுகாக்கவும் விருத்திக்குக் கொண்டு வரவும் சர்க்கார்

கர்மசிரத்தையுடன் முயன்றுவருகிறார்கள். சில சர்க்கார்கள் ஒருபடி முன்னேபோய் தாங்களே இன்ஷ்யூரன்ஸ் நடத்துகிறார்கள், தேசமக்கள் நலத்திற்காக. பல சர்க்கார்கள் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ், வேலையில்லாதார் இன்ஷ்யூரன்ஸ், விருத்தாப்பியர் இன்ஷ்யூரன்ஸ்—இப்படியாக பலவிதமாக சர்க்கார் பணத்தை கம்பெனிகளுடன் இன்ஷ்யூர் செய்து, கம்பெனிகளை விருத்தி செய்ததுமல்லாமல், தேசமக்களுக்கு எவ்வளவு உதவி செய்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

மூன்றாவதாக, நமது இன்ஷ்யூரன்ஸ் சரிதையின் ஆரம்பகாலத்தில், கம்பெனிகளை ஆரம்பித்து பண உதவி செய்ய பணக்காரார்கள் முன் வரவில்லை. ஆங்கிலத்தில், முதல் 'வெளியே வர வெட்கப்பட்டது' என்று சொல்லுவதுண்டு. அதாவது முதல் லேசில் வெளியே வருவது கிடையாது. ஐயோ! இன்ஸ்யூரன்ஸில் பணத்தைப் போடுவதா? அந்தப் பணம் நஷ்டம் தான் என்று சர்க்கார் இம்பீரியல் பாங்கில் போடுவது வழக்கம். இம்பீரியல் பாங்கில் கூடப் போடப் பயந்து பணத்தை இரும்புப்பெட்டியில் பத்திரமாய் வைத்துக் கொண்டிருக்கும் சிலரைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை.

ஆரம்பிப்பது எவ்வளவு கஷ்டமாக இருந்தபோதிலும், ஆரம்பித்துவிட்டால் பொதுஜன ஆதரவு இருக்குமென்று அப்பொழுது நம்பமுடியவில்லை. ஏனெனில் ஜனங்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் விஷயமே தெரியாது. இன்ஸ்யூரன்ஸின் மஹத்தான உபயோகத்தையும் சக்தியையும் ஜனங்கள் அறியவில்லை. அது மோசடியோ என்றுகூடப் பயந்தார்கள். ஒன்றிரண்டு இந்தியக் கம்பெனிகள் மூடப்படவே அவர்கள் சந்தேகம் வளரலாயிற்று. இதற்குத் தகுந்தாற்போல் சில விஷமப் பத்திரிகைகள் 'இஷ்யூரன்ஸ்' அல்லது 'இன்ஸ்யூரன்ஸ் ஏஜன்ட்' என்றால் நையாண்டி செய்து எழுதத் தொடங்கின. ஹாஸ்யத்திற்காக சில பத்திரிகைகள் எழுதியபோதிலும் 'இன்ஷ்யூரன்ஸ்' என்றால் ஒரு வேண்டாத பிடிக்காத விஷயம் என்று சிலர் தப்பர்த்தம் கொண்டார்கள்.

இந்த இடையூறுகளை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தகர்த்தெறிந்து இன்ஷ்யூரன்ஸின் தத்துவத்தை ஒவ்வொரு கிராமங்களிலும் பரப்பி இந்தியக் கம்பெனிகள் தொகையிலும் மதிப்பிலும் விருத்தியடைந்து தலை நிமிர்ந்து நிற்க முடிகிறதென்றால், அவைகளை நிர்வகித்தவர்களும் நிர்வகிப்பவர்களும் எத்தகைய ஆச்சர்யமான சேவை செய்திருக்கவேண்டும்? அவர்கள் விடாமுயற்சியும் ஊக்கமும் எவ்வளவு மகத்தானது?

ஒரு பக்கம் பச்சாதாபமற்ற சர்க்காருடனும் மற்றொரு பக்கம் இன்ஷ்யூரன்ஸின் சக்தியை அறியாத ஜனங்களுடனும் போராடி இந்திய இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனத்தார் அடைந்த வெற்றி அவர்களுடையதல்ல. அது தேசத்தினுடையது. ஏன் என்று பின்னால் கவனிக்கலாம்.



# கொள்வினைத் திறமை*

(டாக்டர் பி. எஸ். லோகநாதன், எம். ஏ. டி. எஸ்ஸி)

நம் தேசத்து ஜனங்கள் பெரும்பாலரும் பரம ஏழைகள். அவசியமான சாமான்களைக்கூட வாங்குவதற்குச் சக்தியில்லாதவர்கள். நமது தேவைகள் எவ்வளவோ இருந்தபோதிலும், அவைகளைத் திருப்தி செய்து கொள்வதற்கு நமக்குச் சிறிதும் திறம் இல்லை. இதற்கு முக்கிய காரணம் நம்முடைய வருமானக் குறைவே. நமக்குள்ள வருமானமெல்லாம் விவசாயம், கைத்தொழில், இன்னும் சில தொழில்கள் இவைகளிலிருந்துதான். தக்க வருமானந்தான் இல்லை; தேவையான சாமான்களை எல்லாம் நாமே நமது தேசத்தில் செய்யத்தான் முடியுமா? அதுவும் முடியாது. நமக்குத் தேவையான சாமான்களைப் பெற ஒருவழிதான் உண்டு. நம்மிடம் இருக்கும் சாமான்களைக் கொடுத்து அவைகளுக்கு ஈடாக அயல் நாடுகளிலிருந்து நமக்குவேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்ளுவதுதான் அந்த வழி. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சென்ற 10 வருஷங்களாக நாம் விற்கும் சாமான்களுக்குக் குறைந்த விலையும், வாங்கும் அயல் நாட்டுச் சாமான்களுக்கு அதிக விலையும் இருப்பதால் நம்முடைய கொள்வினைத் திறமை குன்றிக்கொண்டே வருகிறது. ஒருபக்கத்தில் நமது விவசாயப் பொருள்களை விற்பதில் நஷ்டப்படுகிறோம்; மற்றொரு பக்கத்தில் நமக்குத் தேவையான அயல்நாட்டுப் பொருள்களை வாங்குவதில் கிருக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இருபக்கத்திலும் நாம் கஷ்டப்படுகிறோம்.

நமது நாட்டில் விவசாயம்தான் முக்கியம். இதன் மூலமாய் 100க்கு 70 பேர் ஜீவனம் செய்கிறோம். நம்மில் பெரும்பாலரும் கிராமவாசிகள். 7 லட்சம் கிராமங்களில் வசித்துவரும் நம்முடைய நிலைமை தற்காலத்தில் எப்படியிருக்கிறது? 10 வருஷங்களுக்கு முன் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள சில கிராமங்களின் பொருளாதார நிலையை விசாரணை செய்ததில் ஆள் ஒன்றுக்கு ரூ. 35 தான் சராசரி வருஷ வருமானம் என்று தெரியவந்தது. பிற்பாடு வேறு சில கிராமங்களில் விசாரணை செய்ததிலும் ஏறக்குறைய ரூ. 40 தான் வருஷ வருமானம் என்று ஏற்பட்டது. அதாவது மாதத்திற்கு ரூ. $3\frac{1}{2}$ தான். இதை வைத்துக்கொண்டு தான் சகல காரியங்களையும் நடத்தவேண்டும். சரியானபடி மூன்று வேளையும் சாப்பிடுவதற்குக் கூட இது காணாது. மற்றும் வீடு, உடை, விசேஷம் முதலியவைகளுக்கு எல்லாம் எப்படிச் செலவழிக்க முடியும்? இந்த நிலையில் நம்மவர்கள் கடன்படுவதும் அதிலிருந்து வெளிவரமுடியாமல் தத்தளிப்பதும் ஆச்சரியமாகுமா? மற்ற எங்காட்டிலும் இத்தனை ஏழ்மைத்தனம் இல்லை. இங்கிலாந்தில் ஆள் ஒன்றுக்கு வருஷ வருமானம் ரூ. 1500; அமெரிக்காவிலோ ரூ. 2000; ஜப்பானில்கூட ஆள் ஒன்றுக்கு வருஷ வருமானம் ரூ. 200; நமது நாட்டு கிராமங்களிலோ ரூ. 40 தான். ஆகையால் நம்மவரில் 10-க்கு 4 பேர் சரியானபடி உணவில்லாமல் அரைக் கஞ்சியே குடித்துப் பிழைத்து வருகிறார்கள். இந்த ஏழ்மைத்தனந்தான் நம்முடைய கொள்வினைத் திறமை குறைந்திருப்பதற்கு முக்கிய காரணம்.

இந்த ஏழ்மைத்தனம் நீங்கவும் நம்முடைய ஜீவனம் சுமாரான நிலையிலிருக்கவும் வேணுமென்றால் நமக்குப் பொருளியற்றும் திறம் (Productive Power) அதிகரிக்க வேண்டும். மேல் நாட்டவர்கள் பல வகைப்பொருள்களையும் செய்வதில் மஹா சக்தி யுள்ளவர்கள். அவர்களுடைய தொல்லை எல்லாம் அவைகளை எப்படி விலைப்போக்குவது என்பதும், அவைகளால் வரும் வருமானத்தை எல்லா வகுப்பினருக்கும் சமமாகவும் நியாயமாகவும்

* ரேடியோ பிரசங்கம்

எப்படிப் பங்கிடுவது என்பதுந் தான். இந்தியாவிலோ வருமானம் குறைவு; அந்தக் குறைந்த வருமானத்தில் கூட ஏழை விவசாயிகளுக்கும், கூலிக்காரர்களுக்கும் கிடைக்கும் பங்கு சொற்பமே.

இப் பொருள் இயற்றும் திறம் மிகக் குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானது என்னவென்றால் நமது ஜனத்தொகையை உத்தேசித்து நமக்குள்ள நில விஸ்தீரணம் மிகக்குறைவு என்பதே. நமது மாகாணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஆளுக்குச் சராசரி $4\frac{1}{2}$ ஏக்கர் நிலந்தான் இருக்கிறது. இந்த $4\frac{1}{2}$ ஏக்கர் நிலத்திலும் எல்லாம் சாகுபடி ஆகக்கூடியதுமில்லை. புன்செய், தரிசு, விளையாத அளற்று நிலம் முதலிய எல்லாம் இதில் அடங்கியதே. குறைந்த நில அளவோடு மட்டுமில்லாமல் விவசாயத்திலும் பலவிதக் கஷ்டங்கள் இருக்கின்றன. பல ஜில்லாக்களில் நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை மழையில்லாமல் போய் விடுகிறது. இந்தக் கஷ்டத்தை நீக்க, சர்க்கார் நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய குளம் வாய்க்கால் கிணறு முதலியவைகளை வெட்டி உதவி செய்திருக்கிறார்கள் என்றாலும் நம்முடைய விவசாயம் இன்னும் நீர்த்தட்டினால் தடைபடுகிறது. சில வருஷங்களில் பஞ்சமும் வந்து விடுகிறது.

தவிர, பயிர்கள் நோயினால் கெட்டுப் போய்விடுகின்றன. இதுமட்டு மில்லாமல், விவசாயிகளும், வேலை செய்பவர்களும் பலவிதமான வியாதிகளால் அவஸ்தைப் பட்டு அவர்களின் வேலை செய்யும் திறமையும் குறைந்து விடுகிறது. இந்த வியாதிகளை நிவர்த்திக்க சர்க்கார் இதுவரை செய்ததை விட அதிகமாகவே இனிமேல் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நிலத்திலிருந்தும், தொழிலிலிருந்தும் வரும் வருமானத்தில் பாதிக்கு அதிகமாகவே கடன்காரர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் போய்ச்சேருகிறது. மீதியிருப்பது விவசாயிகளுக்கும், வேலை செய்பவர்களுக்கும் சாப்பாட்டுக்குக்கூடக் காணுவதில்லை. இதனால் விவசாயிகள் முதலானவர்களுக்குப் பாடுபட்டு வேலைசெய்வதில் கொஞ்சமேனும் ஊக்கமில்லாமல் போய் விடுகிறது. இதை உத்தேசித்து நமது சர்க்கார், சமீபத்தில் கடன் நிவாரணச் சட்டம் ஒன்று ஏற்படுத்தி ஓர் பெரிய அனுகூலத்தைச் செய்திருக்கிறார்கள்.

மேலும் விவசாயத்தில் ஆறுமாதத்திற்குத்தான் பூரா வேலையிருக்கிறது. மற்ற ஆறு மாதத்திற்கு வேலையும் வருமானமும் இல்லாமல் நம் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். வேலையில்லாத இந்த ஆறு மாதக் காலத்தில் ஏதாவது ஒரு வழியில் வருமானம் ஏற்படவேண்டுமென்றே மகாத்மா காந்தி நூல் நூற்கவும், காதிவஸ்திரம் நெசவு செய்யவும் திட்டம் ஏற்படுத்தினார். இது மட்டும் போதாது. நீர் வசதியுள்ள இடங்களிலாவது நமக்கு வருஷ முழுவதும் வேலையளிக்கக்கூடிய கரும்பு, வாழை, வெற்றிலை முதலியவற்றைப் பயிரிடவேண்டும். இரண்டாவதாக, பயிர்த் தொழில் இல்லாத மந்த காலங்களில் அரிசி மில்கள் நிலக்கடலை மில்கள் முதலிய சில்லரைத் தொழிற் சாலைகளை ஏற்படுத்தவேண்டும்.

இவை எல்லாவற்றையும்விடச் சுலபமாக சர்க்கார் செய்யக்கூடியது ஒன்று உண்டு. ஒவ்வொரு ஜில்லாவிலும் கட்டிடங்கள் கட்டுவதும், ரஸ்தாக்கள் போடுவதும், குடிதண்ணீருக்குக் கிணறு வெட்டுவதும், மற்றும் இது மாதிரி வேலைகளையும் இந்த மந்தகாலங்களிலேயே செய்தால் குடியானவர்கள் வேலையில்லாமல் திண்டாட மாட்டார்கள்.

இதுவரை நமது தேசத்தின் நிலைமையினால் கொள்வினைத் திறமை குறைந்தது பற்றியும், அதற்கு நாமே செய்துகொள்ளக்கூடிய பரிகாரங்களைப் பற்றியும் கூறினேன். இனி அன்னிய தேச நிகழ்ச்சிகளின் காரணத்தால் நமது கொள்வினைத் திறமை குறைந்துபோனதைப் பற்றிச் சொல்லுகிறேன். சென்ற 10 வருஷங்களாக நமது விவசாயப் பொருள்களின் விலை சரிபாதி குறைந்து விட்டது. "நெல் முதலிய தானியங்களின் விலை குறைந்தால் நல்லது தானே" என்று சிலர் கேட்கலாம். எல்லாப் பொருள்களின் விலையும் ஒரே அளவில் குறைந்தால் நல்லதுதான். ஆனால் சிலவற்றின் விலை குறைந்தும், சிலவற்றின் விலை குறையாமலுமிருந்தால் பலருக்கும் கஷ்டம் உண்டு. மாதச் சம்பளம் முதலிய திட்டமான வருமானம் உள்ளவர்களுக்கே குறைந்த விலையினால் சௌகரி

யம் உண்டு. கூலி வேலைசெய்து அன்றூடம் காசுவாங்கிச் சம்பாதிக்கும் வேலைக்காரர்களுக்குக்கூடச் சென்ற 10 வருஷங்களாக இரண்டு வேளை சாப்பாடாவது கிடைத்துவந்தது. ஆனல் விவசாயிகளின் கஷ்டத்திற்கோ ஓர் அளவில்லை. அவர்கள் கட்டவேண்டிய கிஸ்திக்கும், கொடுக்க வேண்டிய கடன் வட்டிக்கும், பயிரிடும் செலவுகளுக்கும், முன்னைவிட இரண்டு பங்கு தான்யம் விற்கவேண்டியதாயிற்று. இதற்கு வேண்டிய தான்யமோ கையில் கிடையாது. மேலும் குடியானவர்களுக்கும் சொற்ப சாமான்களாவது வாங்காமல் இருக்க முடியுமோ? துணி, சர்க்கரை, உப்பு, மண்ணெண்ணெய் முதலியவற்றிற்கு விலைகொடுத்தே தீரவேண்டும். இந்தப் பொருள்களின் விலையோ தான்ய விலை மாதிரி குறையவில்லை. ஆகையினல் இவைகளை வாங்குவதற்குச் சக்தியில்லாதவர்களாய் ஆனர்கள். இப்பொழுது இரண்டு வருஷங்களாகத்தான் இந்த அபார வித்தியாசம் குறைந்து கொண்டு வருகிறது. தானியப் பொருள்களின் விலையும் சிறிதளவு ஏறி யிருக்கிறது. அர்த்த சாஸ்திரப் பண்டிதர்கள் தானியப் பொருள்களின் விலை குறைந்து போனதற்குப் பல காரணங்கள் சொல்லுகிறர்கள். அவற்றில் சில காரணங்கள் யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. உலகத்தில் பொதுப்பட நேரிட்ட பொருளாதார நெருக்கடிக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பே விவசாயப் பொருள்களின் விலை குறைய ஆரம்பித்து விட்டது. நெல்லின் விலை 1927-ஆம் வருஷத்திலிருந்தே குறைந்து வந்தது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், ஜாவா முதலிய அன்னிய நாடுகள் யந்திரங்களை உபயோகப்படுத்தி விளைச்சலை ஏராளமாகச் செய்து விட்டன. அதன் மூலமாக நம்மூர்ச் சாமான்களின் விலையும் குறைந்து வந்தது. இப்படி அபரிமிதமாக விவசாயப் பொருள்களின் விலை குறைவதற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. சரீர போஷணைக்கு உரிய பொருள்கள் ஓரளவுதான் மக்களுக்கு வேண்டியிருக்கும். எவ்வளவு வேண்டுமோ அதைப் பெற்றுக்கொண்ட பிறகு, அதிகப்படியாயுள்ளதை வாங்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாலும்கூட ஒருவரும் விலைக்குக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் இவ்வுணவுப் பொருள்களை விற்க வேண்டுமானல் விலையை ஒரே மட்டாய் லாப நஷ்டத்தைக் கவனியாதபடி குறைக்க வேண்டியது தான்.

தவிர, மேல்நாட்டார்கள் பணக்காரர்கள். அவர்கள் சென்ற சில வருஷங்களாக அதிகச் சத்துடையதும் தேக போஷணையளிக்கக் கூடியதுமான பழம், பால், முட்டை முதலான உணவுப் பொருள்களையே தேடத் தொடங்கி விட்டனர். ஆகையால் வெகு சொற்பத் தொகையையே நம் தானியங்களின் பேரில் செலவு செய்தனர். இந்தக் காரணத்தினல்தான், இங்கிலாந்து வரியில்லாமலே நம்முடைய சாமான்களை வாங்க ஒப்புக் கொண்டிருந்தும், நமக்கு விசேஷப் பலனில்லை.

இன்னும் ஒருவிஷயம். கொஞ்ச வருஷங்களாக ஒவ்வொரு தேசமும் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத்தானே செய்து கொள்ளவேண்டியது அவசியம் என்று கருதி வெளியூரிலிருந்து வரும் பொருள்களுக்கு அபரிமிதமான வரி ஏற்படுத்தியது. அம்மட்டோடு நில்லாமல் வெளிநாட்டு உணவுச் சாமான்கள் ஓரளவே தங்கள் தேசத்திற்கு வரலாம் என்று திட்டமும் ஏற்படுத்தின. இதனல், விவசாயத்தினலேயே ஜீவனம் நடத்தும் நமக்கு நம்பொருள்களை விற்கமுடியாமற் போய்விட்டது. நம் கொள்வினைத் திறமையும் குன்றியது.

நான் இதுவரை சொன்ன விஷயங்களிலிருந்து நம் கொள்வினைத் திறமையை அதிகரிக்கச் செய்ய நாம் பலவாருக முயற்சிக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. முதலாவதாக, சாமான்களின் விலை முன்னிருந்த நிலைக்கு வரவேண்டும். இது கைகூடுவதற்கு உலகத்தின் பொருளாதார நிலையில் ஒரு மாறுபாடு ஏற்பட்டாலொழிய வேறுவழியில் முடியாது. இன்னும், ஒரு தேசம் மற்ருெரு தேசத்தோடு வியாபாரம் செய்யும்போது எவ்விதமான வரிகளும் நிர்ப்பந்தங்களும் இருக்கக்கூடாது. நம்முடைய கொள்வினைத்திறமை அயல் நாட்டின் வாங்கும் திறமையையும்பொறுத்ததாகும். நம்முடைய செழிப்பும் அயல்

தேசத்துச் செழிப்பும் ஒருவாறு துவந்த முடையதென்றே சொல்லவேண்டும்.

ஆனால் நம்முடைய செழிப்பை விருத்தி யாக்குவதற்குச் சில முக்கிய காரியங்களை நாமே உடனே செய்யக்கூடும். முதலாவது, நாம் அதிகப் பணச்செலவில்லாமல் சாகுபடி செய்யும் வழிகளைச் சீர்திருத்தி, சிறந்த விதைகளாலும் உரங்களாலும் விளைச்சலை கால் மடங்காவது உடனே அதிகரிக்கச் செய்யலாம். இரண்டாவது, நம் வருமானம் அதிகமாக அதில் வெகு சிறிய தொகையே சாதாரண உணவுப் பொருள்களில் செலவு செய்கிறோமாதலாலும், அப்பொருள்களை வெளி நாட்டிற்கு அனுப்புவதில் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாலும், இனிமேல் நாம் காய்கறி பழவர்க்கங்கள், பால்,முதலியவற்றையும்,தொழிற்சாலைக்கு வேண்டிய பஞ்சு முதலிய இயற் பொருள்களையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். மூன்றாவதாக, விவசாயிகளுக்கு மந்தகாலங்களில் வேலை தேடிக்கொடுக்க வேண்டும். ஏனென்றால் இந்த வேலையில்லாக் குறைவே நம் தேசத்தில் பாதி வறுமைக்கு காரணம். நான்காவதாக, விவசாயத்தின் வருமானத்தில் பெரிய பங்கு விவசாயிக்கே கிடைக்கும்படி செய்ய வேண்டும். இதற்கு அரசாங்கத்தார் வேண்டிய சட்டங்களை ஏற்படுத்தவேண்டும். மற்றும் விவசாயத்தை விருத்தி செய்யவும், நோய்களை ஒழிக்கவும், படிப்பை விருத்தி செய்யவும், அரசாங்கத்தார் நிரம்பப் பொருட்செலவு செய்ய வேண்டும். இனி தொழிற்சாலைகள் எவ்வளவு ஏற்படுத்தி நாம் முன்னுக்கு வர முயன்றாலும், இந்தியாவின் செழிப்பு, விவசாயத்தைப் பொறுத்தது என்பதை நாம் மறக்கலாகாது. அது சரியான நிலை வரும் வரையில் நம் கொள்வினைத்திறமை குறைந்தேதான் இருக்கும். தொழிற் சாலைகளும் விருத்தியடைய முடியாது.

சமீபத்தில் மதுவிலக்குச் சட்டத்தினால் ஒரு பெரிய நன்மையைச் சர்க்கார் செய்திருக்கிறார்கள். இதன் மூலமாக நமது ஜனங்களுக்கு ஆரோக்கியமும், தேகவலிமையும் ஏற்படக்கூடும். ஆகையால் இச் சட்டமும் நமது பொருள் இயற்றும் திறமை விருத்தியடைவதற்கு உபகாரமாகிறது.

---

சுக சௌக்கியங்களுக்கு

பஞ்சேந்திரியங்கள் !

அவைகட்கு உதவி

"ஆறாவது இந்திரியம், பணம்!"

பணம் பெருகுவது

பாங்கிலும் இன்ஷ்யூரன்ஸிலும்தான்

# வேலை நிறுத்தம்

"சிரேஷ்டன்"

இப்போது தொழிலாளர் உலகில் 'வேலை நிறுத்தம்' என்ற வார்த்தையை அடிக்கடி கேட்கிறோம். அடிக்கடி வேலை நிறுத்தம் செய்யப்படுவதையும் காண்கிறோம். தற்போது இயந்திர உலகில் இத்தகைய தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் பொதுவாக சமூகத்தையும் குறிப்பாக தொழில் வளர்ச்சியையும் பாதிப்பதால் 'வேலை நிறுத்தம்' என்பதன் தாத்பர்யத்தையும், அதன் பலனையும் பற்றி இப்போது ஆராய்தல் மிகவும் உபயோகமாயிருக்கும்.

வேலை நிறுத்தம் தொழிலாளர்களின் ஒப்பற்ற ஆயுதம் என்பதில் சந்தேகமில்லை. மிகவும் நல்ல ஆயுதம் என்பதிலும் ஆக்ஷேபணையில்லை. அதனால் தான் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்திலும் சமீபகாலத்தில் இந்தியாவிலும் டிரேட் யூனியன் சட்டங்கள் மூலம் தொழிலாளர் ஸ்தாபனங்களைச்சட்டபூர்வமாக்கி அவைகளுக்கு உயர்வும் ஊக்கமும் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகையால்தான் இத்தகைய ஒப்பற்ற ஆயுதத்தை ஜாக்கிரதையாக உபயோகிப்பது அவசியமாகிறது. ஒரு நல்ல கோடாலியை மரம் வெட்ட உபயோகிக்கலாம். இவ்வளவு நல்ல கார்யத்துக்கு உபயோகிக்கப்படக்கூடிய கோடாலி ஒரு நல்ல ஆயுதம்தான். ஆனால் அந்தக் கோடாலி நல்ல கோடாலியாக இருக்கிறதென்பதற்காக நமது காலிலேயே வெட்டிக்கொள்ளலாமா? மழுங்கின கோடாலியாக இருந்தாலும் போனால் போகிறதென்று காலில் போட்டுக்கொள்ளலாம்; அதனால் பெரிய ஆபத்து வந்துவிடாது. ஆனால் கோடாலி நல்ல கோடலியாக இருப்பதால்தான் காலில் போட்டுக்கொள்ளக் கூடாது. அதைப்போல "வேலை நிறுத்தம்" ஒரு நல்ல கூர்மையான ஆயுதமாக இருப்பதால்தான் தொழிலாளர்கள் கவனமாக அதை உபயோகிக்கவேண்டும்.

ஸ்ரீ. வாடையாவுக்கும் பின்னி கம்பெனிக்கும் நடந்த தகராறு சம்பந்தமாக ஹைக்கோர்டு செய்த தீர்ப்பின் விளைவாகத்தான் சர்க்கார் டிரேட் யூனியன் ஆக்டைக் கொண்டு வந்தார்களென்பது ஞாபகம் இருக்கலாம். சர்க்கார் சட்டத்தின் விளைவாக டிரேட் யூனியன்கள் சட்ட பூர்வமான ஸ்தாபனமாயின. அவர்கள் சமாதானமாக அவர்கள் கட்சிக்காகப் போராடலாம்; வேலை நிறுத்தம் செய்யலாம். அதனால் கம்பெனி நஷ்டமடைந்தால் டிரேட் யூனியன் நிதியைத் தொடமுடியாது. பலாத்காரமில்லாமல் நடந்து கொண்டால் வேலை நிறுத்தக்காரர்களை ஒன்றும் செய்ய முடியாது. தகறார்களைத் தீர்க்க சர்க்கார் இருகட்சியின் ஒத்துழைப்பேரிலும் சமாதானத்தை உண்டாக்க முடியும். இதனால்தான் விட்லி கமிஷன் இரண்டு கட்சிகளுக்கும் தகுந்த பிரதிநிதித்துவம் உள்ள ஸ்தாபனங்கள் இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டது. தொழிலாளி முதலாளிகள்—இருவரும் சேர்ந்து ஒப்புக்கொண்ட ஏற்பாட்டை சர்க்கார் அமுலுக்குக்கொண்டு வரும்படி முயலலாமே தவிர தங்கள் ஏற்பாட்டை ஒரு கட்சியின் பேரிலும் திணிக்க சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது.

இவைகளெல்லாம் எதற்காகச் சொல்லப்பட்டது என்றால் சரித்திர ரீதியாக உண்மையாக டிரேட் யூனியன்கள், முதலாளி ஸ்தாபனங்களின் நிலையைக் காட்டுவதற்காகத்தான். கொஞ்சகாலத்திற்கு முன்பாக லண்டன் "டைம்ஸில்" ஸர் ஆர்தர் பக் முதலாளி - தொழிலாளி சம்பந்தமாக எழுதியிருந்த கட்டுரையில் மூன்று முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

(1) டிரேட் யூனியனை முதலாளிகள் ஒப்புக்கொண்டு அவைகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

(2) ஒப்பந்தத்தைக் கண்ணியமாக நிறைவேற்ற வேண்டும். இரண்டு கட்சிகளும் ஒருமித்துத் தீர்மானித்த வழிகளில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(3) நிலைமையை ஒட்டி சம்பளம் தீர் மானிக்கப்படவேண்டும். நிலைமை மாறி ஞல் இரண்டு கட்சிகளும் மறுபடியும் கலந்து ஆலோசித்து சம்பளங்களை மாற்றி யமைக்கவேண்டும்.

இந்த மூன்று காரணங்களும்தான் இங் கிலாந்து இரும்புத் தொழிலின் வளர்ச்சிக் கும் தொழிலாளரின் அமைதிக்கும் கார ணமா யிருந்த தென்பதை நாம் அறிகி ரேம். இந்த மூன்று அடிப்படையான கொள்கைகளை இந்தியத் தொழில் வளர்ச் சியில் கருத்துள்ள தொழிளாளர்களும் முதலாளிகளும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவில் டிரேட் யூனியன்கள் மிகுந்த முக்கியத்வ மடைந்து விட்டன. முதலாளிகளுடன் பேசி தங்கள் கட்சியை எடுத்துச் சொல்ல பூர்ண அதிகாரத்தை அவர்கள் அடைந்திருக்கிருர்கள். உண்மை யைக் கூறப்போனுல் டிரேட் யூனியன் களைப் பார்த்து முதலாளிகள் பயப்படும் படியான காலம் வந்து விட்டது என்று கூடச் சொல்லலாம். அதனுல்தான் தன் சக்திக்குத் தகுந்தாற்போல் பொறுப்பை யும் டிரேட் யூனியன்கள் உணர வேண்டி யது அவசியமாகிறது.

ஒப்பந்தத்தை நிறைவேற்றும் விஷயத் தில்தான் இந்திய முதலாளிகளும் தொழி லாளிகளும் சரியான கவனம் செலுத்துவ தில்லை. முதலாளிகள் டிரேட் யூனியன் மேல் குற்றம் கூறுகிருர்கள். தொழிலாளி கள் முதலாளிகள் செய்யும் 'அட்டூழியங் களை' சுட்டிக் காட்டுகிருர்கள். இந்த குழப்பத்தில் உண்மையைக் கண்டு பிடிப் பது அரிதா யிருக்கிறது.

மூன்ருவதாக, சம்பள நிர்ணயிப்பு விஷயத்தை ஆராயும்போது சமீப காலத் தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த போது கூறிய ஒரு முக்கிய கார ணம் நினைவிற்கு வருகிறது. உதாரண மாக, சென்னையில் நடக்கும் பல 'ஸ்டிரைக்' குகளுக்கு ஓர் முக்கியமான காரணம் சம் பள உயர்வு பற்றியது என்பதை நாம் அறிவோம். இப்படித் திடீரென்று சம்பள உயர்வு கேட்பதற்கு நிலைமையில் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது? திடீரென்று முதலாளிகளுக்கு எங்கிருந்தாவது லாபம் வந்து விட்டதா? அப்படி ஏற்பட்ட ஐசு வர்யத்தில் ஒரு பாகத்தை தொழிலாளர் கள் கேட்கிருர்களா?

பக்ஷபாதத்துடன் நிலைமையைக்கவனிக் கும் எந்தப் பொருளாதார மாணவனும், மகாயுத்தத்திற்கும் பின் ஏற்பட்ட பொரு ளாதார மந்தம் இன்னும் நாட்டை விட்டுப் போகவில்லை என்பதை ஒப்புக் கொள்ளு வான். சொல்லப் போனுல், நிலைமை வர வர மோசமாகிக் கொண்டுதான் போகி றது. பல முக்கியத் தொழில்கள் நஷ் டத்தில் வேலை செய்கின்றன. நகரங்களி லுள்ள முக்கிய தொழிற் சாலைகள் மூடப் பட்டு வருகின்றன. பல அச்சாபீஸ்கள் மறைந்து வருகின்றன. இதற்குக் காரணம் நாடுகளில் உள்ள பஞ்சம்; குடியானவன் வறுமை.

பட்டணங்களிலுள்ள தொழிலாளர்கள் கிராமங்களிலுள்ள தங்கள் சகோதரர்க ளுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது அவர்கள் சம்பளத்தைப்பற்றி குறை கூறமாட்டார் கள். அதிகச் சம்பளம் கேட்கக்கூடாது என்று கூறவில்லை. நியாயமான, நிலை மையை ஒட்டின சம்பளத்தை அவர் கள் பெறவேண்டும்.

வேலை நிறுத்தம் சம்பந்தமாக பல பக்ஷ பாதமற்ற கனவான்கள் ஒருவிதத் திட்ட மான அபிப்ராயம் கொண்டிருக்கிருர்கள். வேலை நிறுத்தங்களை சிலர் ராஜீய விஷயத் துக்காக உபயோகித்துக் கொள்ளுகிருர்கள் என்ற சந்தேகம் பரவி வருகிறது.

இதற்கெல்லாம் சர்க்கார் இடம் கொடா மல் தொழிலாளர் பிரச்னையைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். 1) கால நிலை மையை ஒட்டி 'இண்டக்ஸ் நம்பர்' தயார் செய்தோ, அல்லது வேறு விதமாக நிலை மையை ஆராய்ந்தோ தொழிலாளர் சம்ப ளங்களை நிர்ணியக்க வேண்டும். அல்லது 2) தொழிலாளர்களையும் கூட்டாக அமைத்து லாபத்தில் ஒரு பங்கை அவர் களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். அல் லது, 3) தொழில்களைத் தாங்களே எடுத் துக் கொண்டு நடத்தவேண்டும். இதை ஒன்றும் செய்யாமல் பழைய சோம்பேறிக் (Laissez Faire) கொள்கையை வைத்துக் கொண்டு பேசாமல் இருந்தால், நாட்டில் தொழில்ளர் புரட்சி ஏற்பட்டுக் குழப்பம் உண்டாகும்.